SUPPLEMENT TO THE "CATHOLIC GUARDIAN"

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"GUARDIAN"
JAFFNA.

Telephone: No. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

74-ம் புத்தகம் 32-ம் இல. யாழ்ப்பாணம் 1949-ம் ஆண்டு ஆவணி மாசம் 18-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## வெள்ளிக் குருசுச் செபமாலை

அதன்மேல் அந்தவாலிபர் தனதுகரத்தையோ அன்றேல் சிரசையோ திரும்பஅசைக்கவில்லை. தன்னுடன் நேர்ஸ்பேசுவதற்குமுன் எப்படிக்கிடந்தாரோ அப்படியே இன்னமும் அயர்ந்துபோய்க்கிடந்தார். பின்னர் அந்தவாலிப டக்றர் நேர்ஸை மிகுந்தபட்சத்துடன் விழித்து: "உனது நண்பரா இந்த வாலிபர்? அன்றேல் உனக்கு அறிமுகமானவரா?" என்று வினவினர்.

"ஓ! டக்றர், ஒருபோதும் இல்லை; எனது சீவியகாலத்தில் நான் ஒருபோதுமே இவரைக் கண்டதில்லை. முன்பின் இவர் எனக்கு அறிமுகமானவருமல்ல."

"அப்படியா, மெத்தநல்லது" என்று டக்றர்புன்னகையுடன் மொழிந்தார். அதன்மேல்கன்னிகாஸ்திரீ அவளைநோக்கி: "நல்லது, இனிமேல் நீபோய் உனது நோயாளிகளைப் பார்வையிடுவது நலமாகுமென நினைக்கிறேன். உனதுசெபமாலையையும் எடுத்துக்கொண்டு போகலாம்" என்றார்.

"தயவுசெய்து எனதுசெபமாலையை அவருடன் விட்டுப்போக அனுமதியுங்கள்; அதனை எவ்வாறு கோர்த்து அவர் பிடித்திருக்கிறார் என்பதை நீங்கள் தானே காணுகின்றீர்களே" என்று தனது செபமாலையை அவரிடம் விட்டுப்போக டக்றரிடம் மனுப்பண்ணிக் கொண்டாள்.

"மிகநல்லது: வேண்டுமானால் நீ விட்டுப்போகலாம்."

"டக்றர், நான்நினைப்பது இதுதான். தங்களுக்காக ஒருசெபமும் சொல்லப்படாமலும், தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்படுவதாகச் சொல்லிக்கொள்ளச் சந்தர்ப்பம்எதுவும் கிடையாமலும் இவர்கள் தேவனைச்சந்திக்கப் போகிறார்களே என்பதுதான்; இனிஎல்லாம் சரிதான்; சிஸ்றர்! நான்போய்வருகிறேன்; இங்குநான் சிறிதுவேளை தங்க அனுமதிதந்ததற்காக மெத்தப் பெரியஉபகாரம் டக்றர்" என்று கூறி இருவருக்கும் சிறுபுன்முறுவலுடன் ஆசாரஞ்செய்துவிட்டு அப்பாற் சென்றாள் நேர்ஸ் பிலோமினா.

நிற்க, காலச்சக்கரம் சுழன்றோடிக்கொண்டிருந்தது. ஆஸ்பத்திரியில் இதுநிகழ்ந்து மூன்று மாசங்கள் ஆகிவிட்டன. எல்லாம் மறக்கப்பட்ட ஓர் சம்பவமாயிற்று. அங்ஙனமாக ஓர்நாள் பிற்பகல் 1 மணியிருக்கும். லண்டன்நகரின் சுற்றூடலிலுள்ள கோவில்ஒன்றிலே நேர்ஸ்பிலோமினா முழந்தாளிட்டுச் செபம்பண்ணிக்கொண்டிருக்கிறாள். அவள் இப்போது சமீபமானகந்தோர் ஒன்றிலே வேலைபார்த்துவருகின்றாள். மத்தியானப்போசனத்துக்கென்றுகொடுபடும் ஒருமணிநேரத்திலே சிலநிமிஷம் செபம்பண்ணுவதற்காக அவள் தினமும் கோவிலுக்குச்செல்லுகின்றாள். அன்றும் வழமைபோலச் செபம்பண்ணும்போது துக்ககோலமான உடைதரித்திருந்த நடுத்தரவயசுடைய ஓர் சீமாட்டியும் அக்கோவிலுள்பிரவேசித்து அவளுக்குச் சற்றுமுன்பாக ஓர்பெருமூச்சுடன் முழந்தாட்படியிட்டுத் தனது கைப்பையிலிருந்து வெளியேஎடுத்த ஓர்பொருள் திடீரென்று நேர்ஸ் பிலோமினாவின் கண்ணையும் கருத்தையும் ஒருங்கேகவர்ந்துகொள்ளலாயிற்று. அம்மட்டா! மிகுந்தஆச்சரியத்தையும் அவளுக்கு உண்டுபண்ணிற்று. என்றாலும் அவள் தன்மனதை அடக்கிக்கொண்டுவெகுஅமைதியாகச் செபம்பண்ணினாள்.

சிலநிமிஷங்கள் சென்றன. அந்தச்சீமாட்டி தனதுசெபத்தை முடித்துக்கொண்டு எழுந்து கோவிலைவிட்டு வெளியேசென்றாள். அப்போது நேர்ஸ் பிலோமினாவும் அவளைப் பின்தொடர்ந்து வெளியே சென்று கனிவான குரலில்: "அம்மா! தயவுசெய்து என்னை மன்னிக்கவேண்டும்; நான்தங்களிடம் ஓர்காரியத்தைப்பற்றிக்கேட்க ஆசிக்கிறேன்" என்றாள்.

இதைக்கேட்டதே அந்தச் சீமாட்டி அவள்பக்கமாகத் திரும்பினாள். தனதுவதனத்திலே பெரிதும்அமைதி விளங்க, புன்னகை ததும்ப அவளைநோக்கி: "நல்லது என்னகாரியம்கேட்க ஆசிக்கின்றாய்" என்றாள்.

"அம்மா, தாங்கள்வைத்திருக்கும் அந்தச்செபமாலை இருக்.... அதுநான்....செபமாலைபோல்.... அழகான....கருமணிச்செபமாலை....இந்தமணிகள்போல் கிடைப்பதுஅருமை; இன்னும் இச்செபமாலையில்தொடுத்திருக்கும் வெள்ளிக்குருசும் அதற்குரியதல்ல முன்னர் அதிலிருந்த குருசை நான்இழந்துபோனேன்; அதற்குப்பதிலாக அந்தவெள்ளிக்குருசை நானே அதில்தொடுத்தேன்; அதினால் இந்தச்செபமாலையை யார் தங்களுக்குக் கொடுத்தார் என்று தயவுசெய்து தெரிவிப்பீர்களா?"

அப்போது அந்தச்சீமாட்டி, மிகுந்தபிரமிப்பு அடைந்தவளாய்ச் சுற்றுமுற்றும் பார்த்துச் சிறிதுவேளை எதனையோ சிந்தித்துவிட்டுப்பெரிதும்மன அங்கலாய்ப்புடன்: "அப்படியானால்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## மருதமடு மறக்கமுடியாத
## மதுரமடு

விருத்தம்

ஆடியெனு மாதமகன் றோடிமறை மறையினும்
அன்னைமடுக் காட்சி கண்முன்
ஆடிவிளை யாடியென் அங்கம் சிலிர்த்துளம்
ஆநந்த மாகு தின்றும்
நாடிவரு வாகனம் பன்னிராய் ரத்துமேல்
நகர்ந்ததொரு வரிசைகண் டேன்
நகரமோ இந்திரப் பிரஸ்தமோ ஈடில்லை
நவிலவே றென்ன வுண்டு
தேடியணை மக்கள்பதி மூலைமுடுக் கெங்கணும்
தேங்கிவழிந் தோட வன்று
திசையெட்டும் எள்ளிடச் சற்றும்இட மின்றியே
திக்குமுக் காடி நின்றார்
கோடிநவ மரியன்னை பாவியெம்மை யாட்கொண்டு
கோரபவம் நீக்குதற்கு
குமுதமலர் வாவியணை மருதநிழற் சோலையுனைக்
கொண்டனள் உன்அதிஷ்டமே

பதிதனிற் சிறந்த பதியெனப் புகழ்ந்து
பரிமள சுகந்தமே கமழ்ந்து
பசியபொன் மருத மரமது அடர்ந்து
பளிங்கெனப் புனல்மடு நிறைந்து
திதிதொறும் நலிந்து வருபவர் குளிர்ந்த
தீஞ்சுவைத் தேனினை நுகர்ந்து
தித்திக்கத் தெவிட்டாத் தெள்ளமு துணவை
திணித்தவர் களையினைக் களைந்து
கதியிலை யெனச்சொன் மதியுணர் விழந்து
கலங்கியே பவப்பிணி யழுந்திக்
கதறிடும் நீசப் பாவிகள் அழுகைக்
கண்ணினீர் கனிந்துமே துடைத்து
அதிதியர் இலட்சம் அனைத்துமோர் விரலால்
அணைத்தருள் அன்பினைக் கனியும்
அற்புத மரிதாய் பொற்பதம் பதியும்
அலங்கிர்த மடுத்திருப் பதியே

"பத்திமா" "லூர்தெ"னும் சுத்தமா பதிகள்போல்
பத்தியருள் பரவி நின்று
பரமன்னை 'லங்கா'வில் பரவசக் காட்சியருள்
பாக்கிய மடைந்த பதிநீ
தித்திப்பின் ஞானமிர்த தீஞ்சுவை நிரம்பியே
தேங்கிவழி காரணத் தால்
திருநாமம் மதுரமடு எனநாமம் புனைபெற்ற
தெய்வீக மானபதி நீ
எத்திசையு ளோரையும் எம்மதத் தோரையும்
ஈர்ந்திழுத் தொன்று கூட்ட
இருணீங்கு மெய்க்காந்த முன்னிட மிருப்பதும்
இப்போது கண்டுகொண் டேன்
முத்திநெறி தந்தருள் அத்தனடி சேர்த்திட
மூவுலக ராணி கண்ட
முதிரையொடு பாலையடர் மருதமரச் சோலைபுகழ்
மொழியவொரு மொழியு மிலையே

வங்காலை — எஸ். பர்ணபாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்தோலிக்க சமாச்சாரம்

### பரிசுத்தவருடப் போட்டி

சாதாரண திருச்சபையின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பரின் அழகானபடம் ஒன்றைப் பந்தையத்திலே விந்தாரித்துக்கொடுக்கும் சர்வதேச போட்டிஒன்றை நடத்தப்போவதாக வத்திக்கானின் பரிசுத்தவருடகலைப்பொருட்காட்சியை நிர்வகித்து நடத்தவிருக்கும் கொம்மிஷனர்கள் அறிவித்திருக்கின்றார்கள். போட்டியிலே வெற்றிபெறும் படத்தைப்போலப் பலவர்ண மாபிள்கல்லில் அர்ச். சூசையப்பரின் பெரியதோர் சுரூபஞ்செய்து சம்பேதுருவானவர் மகாஆலயத்தின் வடக்குப்புற மாடத்தின் முதல்அடுத்தாரிலே வைக்கப்படும்.

### பரிசுத்தஸ்தலங்கள்

பலஸ்தீனாவிலுள்ள பரிசுத்த ஸ்தலங்களை அராபியரின் ஆதீனத்தில் விடவேண்டுமென்று முன்னர் ஆலோசனை கூறிய அலெக்சாந்திரியா நகரின் கிரேக்க பிரிவினைச்சபைப் பத்திறியாக்குவான இரண்டாவது கிறிஸ்ரோபோறஸ்அவர்களும் இப்போது பாப்பரசரைப்போலவே அத்திருஸ்தலங்களைச் சர்வதேசங்களுக்கும் பொதுவாக்கவேண்டுமென்பதற்குச் சார்பாய் எழுதியிருக்கின்றார். அலெக்சாந்திரியா நகரிலுள்ள புறொட்டெஸ்தாந்தர்களின் தலைவரும் அவற்றைச் சர்வதேசங்களுக்கும் பொதுவாக்கவேண்டுமென்பதை ஆதரித்துத் தமது அபிப்பிராயத்தை ஏலவே தெரிவித்திருக்கின்றார். கிறீஸ்தவர்கள் மாத்திரமல்ல, நூற்றுக்கு 80 வீதமான முஸ்லீம்களுமே ஜெருசலேம், பெத்லேகம், நசரேத் என்பவைகளைச் சர்வதேசங்களுக்கும் பொதுவாக்கவேண்டுமென ஆசிப்பதாக ஜெருசலேம் நகரிலுள்ள ஆர்மீனிய திருச்சடங்குகளின் கத்தோலிக்க குருவாகிய வண. ஜோண் குயூம்ஜியன் சுவாமியார் கூறுகின்றார்.

### முதல்நன்மைப்பாக்கியம்

லிவர்ப்பூல் நகரிலுள்ள சீபோத் எனுமிடத்திலே சமீபத்தில் ஏழுவயசுடைய பிறயன் வில்ட்மன் எனும் பாலியர் முதல்நன்மைபெற்றபோது, அவருடைய தந்தை, தாய், நான்கு சகோதார், ஏழுசகோதரிகளும் அதேகிறுதியில் ஒரேவரிசையாய் அமர்ந்து அவருடன் திவ்வியநன்மை பெற்றுக்கொண்டார்கள். இவர்பெற்றாருக்கு வேறு மூன்று பிள்ளைகளும் இருக்கிறார்கள். அவர்களில் 5 வயசுடைய பிள்ளைஒன்று அவ்வேளை கோவிலில் இருந்தது. ஒருவயசுடைய கடைசிப் பிள்ளை வீட்டிலே இருந்தது. மற்றோர்பிள்ளையான தோமஸ் எனும் வாலிபர் ஜேர்மனியிலே சேவைசெய்து வருகின்றார். இவரும் அன்றுகாலை கீயெல்நகரில் திவ்வியநன்மை பெறலாயினர்.

### சம்பேதுருவானவரின் கல்லறை

பத்துவருடகாலமாகக் குடைந்து நடத்திய ஆராய்ச்சியின் விளைவாய்ச் சம்பேதுருவானவரின் கல்லறையானது, சம்பேதுருவானவர் மகாஆலயத்தின்கீழேயே இருந்துவருகிறதென்னும் கிறீஸ்தபாரம்பரிய உண்மை தாபிக்கப்பட்டிருக்கிறதென்று அவ்வாலயசிற்பியாகிய சிஞ்ஞோர் ஜியோவான்னி நிக்கொலோஸி அவர்கள் கூறுகின்றார். இன்னும் அவ்வாலயத்தின்கீழேதான் நீரோமன்னனின் சேர்க்கஸ்சாலை இருந்ததென்பதை அங்கு கண்டெடுக்கப்பட்ட சலவைக் கற்சாசனம் உறுதிப்படுத்தியிருக்கிறதென்றும், பிந்த இச்சேர்க்கஸ்சாலை ஓர் சேமக்காலை ஆக்கப்பட்டு, அதற்குச் சமீபமாகவே சம்பேதுருவானவர் அடக்கஞ்செய்யப்பெற்றாரென்றும் அவர் தெரிவிக்கின்றார். முன்னர்கருதப்பட்டவாறு, இந்தச் சேர்க்கஸ்சாலையின் சுவர்களைஉபயோகித்து ஆதியான சம்பேதுருவானவர் மகாஆலயத்தைப் பெரியகொன்ஸ்தந்தீன் அரசர் கட்டியெழுப்பவில்லையென்றும், ஆனால் பழையவத்திக்கான்குன்றின் பகுதிகளை வெட்டியெடுத்து, தைபர்நதியை நோக்கிய அக்குன்றின்இறக்கமான புராதன சேமக்காலையைநிரப்பி இவ்விதம் ஓர் செப்பமான நிலத்தைச்சித்தஞ்செய்து, அப்பெரிய கட்டிடத்துக்குப்போதிய அத்திவார பெரியதாக்கிக் கொண்டாரென்றும் அவர் கூறுகின்றார்.

### பரிசுத்தவருட யாத்திரிகர்கள்

பரிசுத்தவருடம் ஆரம்பமாக இன்னும் நான்கு மாதங்கள் இருக்கும்போதே அவ்வருடத்தில் பரிசுத்தபாப்பாசரின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கும், திருச்சபையின் விசேஷ பலன்களை அடைந்துகொள்வதற்குமாக நித்தியநகரைத் தரிசிக்கவிருக்கின்ற யாத்திரிகர்களுக்கு இடவசதியும், பிரயாண வசதியும் அருளுவதற்காக இத்தாலியிலும், ஏனையநாடுகளிலும் தீவிரஆயத்தங்கள் நடைபெற்றுவருகின்றன. இத்தாலியிலிருந்து மாத்திரம் அவ்வருடத்திலே நித்தியநகரைத் தரிசிக்கவேண்டுமென்று தங்களுக்குள்ளகருத்தை ஏலவேதானே பத்துலட்சம் யாத்திரிகருக்குமேல் தெரிவித்திருப்பதாக ரோமாபுரியிலுள்ள பரிசுத்தவருடகாரியாலயம் அறிக்கையிடுகின்றது. ஆனால், இத்தொகை உள்ளபடி இன்னும்கூடுதலாகவே இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பிரான்ஸ்தேசம் ஒருலட்சம் யாத்திரிகருக்குமேல் அதாவது 1925-ம் ஆண்டின் பரிசுத்தவருடத்திலோ அன்றேல் 1933-ம் ஆண்டின் விசேஷ யூபிலிவருடத்திலோ அனுப்பியதிலும் எவ்வளவோ அதிகமாக அனுப்புமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜேர்மனியும் பிரயாண அனுமதிச்சீட்டுக் கஷ்டமும், பணக்கஷ்டமும் இருந்தபோதிலும் அரைலட்சம் பேர்களை அடக்கிய யாத்திரைகளை நடத்திவைப்பதற்குத்திட்டம் வகுக்கின்றது. ஆஸ்திரியா, பெல்ஜியம், ஸ்கான்டினேவியா, ஸ்பெயின், போர்த்துக்கால், பிரித்தானி ஆதியநாடுகளும், கத்தோலிக்க குடிசனங்களைக்கொண்ட ஏனைய ஐரோப்பிய நாடுகள்சகலமும் யாத்திரைக்குழாங்களை அணிவகுத்துவருகின்றன. கத்தோலிக்கசமயம் இன்னுமே போதகநிலைமையிலுள்ள நாடுகள் தானும் பெருந்தொகையான யாத்திரீகர்களை அனுப்புமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா, ஸீசபீரியா, கினியா, இலங்கை, பிலிப்பைன்ஸ் நாடுகளில் யாத்திரைகள் அணிவகுக்கப்படுவதாகப் பரிசுத்த வருடகாரியாலயத்துக்குச் செய்திகிடைத்திருக்கிறது. அடுத்தவருடம் பங்குனி, ஐப்பசிமாதங்களுக்கிடையில் பன்னிரு யாத்திரைகளை அனுப்பிவைக்குமாறு சுவிற்சர்லாந்தின் பரிசுத்தவருட தேசிய கொம்மிற்றி ஆயத்தப்படுகின்றது.

## நெடுந்தீவு அவியல்

ஆதிகாலமக்கள் அவியல்உணவை அறியாதவர்கள். அவியலுணவான பின்னரே நோய்கொடி முதலியன மனிதவர்க்கத்தை ஆட்கொண்டன. ஆயினும் அவர்களிலும் மனஅவியல் இருந்ததே. சாத்தான் மனுக்குலத்தில்கொண்ட அவியலாலேயே ஏவாளைக் கெடுத்தான். ஆபேலில்கொண்ட அவியலாலேயே முதற்கொலைநடந்தது. தாவீதரசனின் அவியலே பெரும்பழி பாதகத்தில் அவரைக்கொண்டுபோய் இறக்கிவிட்டது.

மனஅவியலால் மனோதத்துவங்கள் பாதிக்கப்படுகின்றன. அத்தோடு தொடர்புடைய தேகமே இன்னலுறுகின்றது. அறத்தைக் கெடுப்பதும், மறத்தையூட்டுவதும் அதுவே. அதையே அழுக்காறு, பொறாமை, காய்மகாரம், எரிச்சல்எனப் பலபெயரால் அழைப்பர். ஆதிகாலந்தொட்டுஇந்நாள் வரையும் சண்டை, கொலை, யுத்தங்கள் மனஅவியலாலேயே சம்பவித்திருக்கின்றன. இந்தஅவியல் நந்தீவிலும்குடிகொண்டுவிட்டது. இது தனது தலைமைக்காரியாலயத்தை மத்தியபகுதியில் ஏற்படுத்திக்கொண்டது. மனஅவியல் காரணமாய் இருகட்சிகள் உண்டாய்விட்டன. கடந்தஆறுமாசத்துக்குமேல் வாய்ச்சண்டையில் இருந்தது. இதனை ஊர்அதிகாரிகள் நன்கறிந்திருந்தும், தடுக்கக்கூடிய வழிவகைகளிருந்தும் கண்மூடிப் பூனைகளாயிருந்தது விசனிக்கத்தக்கது. தொந்தரவுண்டாகும் என்பதைஅறிந்து குருவரும் இரவில் நடக்கவேண்டிய தேவாராதனையைப் பிற்பகலிலே நடத்தியது மெச்சத்தக்கது. இங்குள்ளார் சொன்னபுத்தியுங்கேளார், சுயபுத்தியுமில்லோராய்ப் படுபாதகம் செய்யத் தலைப்பட்டனர். "கேடுவரும்பின்னே, மதிகெட்டுவரும் முன்னே" என்பர். தங்கள் சமயகுருவின் இடையறாப் போதனையைக் கேட்டார்களா? அவர் பிரசங்கபீடத்தில்நின்றுகதறியதொனியை உணர்ந்தார்களா? எத்தனைபுடம் போட்டாலும் இரும்பு பொன்னாகாதது போல், அவர்பேச்சு கழுதைக்குச்செய்தஉபதேசமாய்விட்டது. மனஅவியலின் வயப்பட்டார்க்குத் தருமஉணர்வேது? "இரும்புபிடித்த கையும்,சிரங்குபிடித்தகையும் சும்மாவிரா" தென்பர். குரங்கின் கைப்பட்ட பூமாலையாய் இவர்கள் கையிரும்பு சென்றமாதம் 23-ந்திகதி இரத்தச்சுவை அறிந்தது. இருஉயிரை வீழ்த்தியது. நால்வரைப் படுகாயப்படுத்தியது. அந்தோ! வாலிபர் இருவர் வாழும்வயதில், வளரும்வயதில் மாதாபிதா சுற்றம் பரிதபிக்க, நடுத்தெருவில் தங்கள்சமய இறுதிச்சடங்குகள் யாதுமின்றி மனஅவியல் காரணமாய் மடிந்தனரே! சுற்றத்தவரின் கையால் திடுதிடுத்துப் பதைபதைத்து மாண்டனரே. இனம்இனத்தைக்காக்கும், வேலிபயிரைக்காக்கும்" என்றால், வேலியேபயிரைமேய்ந்து விட்டது. இனம்இனத்தை அழித்துவிட்டது. இரும்பாலான இரத்தவாறுகள் பிரேதங்களைக் குளிப்பாட்டின. பூமாதேவி இரத்தத்தைக்குடித்துக் கொலைப்பழிக்குச் சாட்சியிட்டாள். பொறாமைப் பேயே! வாலிபர் இருவரின் உயிரைப் பலியெடுத்தாயே!

கொலைபாதகம் பதின்மரில் சுமத்தப்பட்டது. நோயாளியைச் சாகிறவரையில் விடான்வைத்தியன். சண்டாளனை இருக்கிறவரையும் விடான் நியாயவாதி. தேகஅவியல்காரணமாய் நோயாளியும், மனஅவியல்காரணமாய் சண்டாளனும் தங்கள் பணத்தையும், நேரத்தையும் செலவிடவேண்டியவர்கள். "பாம்பைமுட்டையிலும்,புலியைக் குட்டியிலும் கொல்லவேண்டும்"என்பர். அவ்விதமே மனஅவியலை முளையிலேயே களையவேண்டும். வளரஇடங்கொடுத்தால் "சிரங்குமுற்றிப் பவுத்திரமாவது"போல் கொலைப்பழி வரையும் தாராளமாய் வளர்ந்தேதீரும். இதைநந்தீவின் நடுப்பகுதியின் இணைக்கொலை துலாம்பரமாய்க் காட்டுகின்றது. இருபகுதியாரிடையிலும் முளைத்த மனஅவியல் கொலையில்முடிந்தது. இனிமேல் நடப்பது என்னத்தைப் பொறுத்தது? "பெருமாளிருக்கும் வரையில் திருநாளிருக்கும்" என்றாற்போல மனஅவியல் இருக்கும்வரையில் பாதகச்செயல்கள் இருந்தேதீரும். மதிகேட்டை உண்டாக்கும் இந்தஅவியலைவிட்டு எல்லார்க்கும் நல்லாறாய் வாழ்தலே சாலச்சிறந்தது.

—போதுநலப்பிரியன்

---

—தூரகிழ் தேசங்களிலுள்ள ஒரேயொரு கத்தோலிக்க நாடாகிய பிலிப்பைன்ஸ்தீவுகளிலுள்ள 21 மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமார்களில் 17 பேரும் பிலிப்பினோவர்களான சுதேசிகளே, இப்பதினேழு பேருள்ளும் ஒருவர் அதிமேற்றிராணியார். ஏனைய பதினறுபேரும் மேற்றிராணிமார்கள்.

## இஸ்பிரித். திரு. பின்வரும் 11-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு
(மாற். 7: 31—37)

அக்காலத்தில் யேசுநாதர் மறுபடியும் தீரின் எல்லைகளை விட்டுப்புறப்பட்டு, சீதோன்வழியாகத் தெக்கப்போலி என்னும் நாட்டின் எல்லைகளின் நடுவே கலிலேயாவின் கடலருகே வந்தார். அப்போது ஊமையனுஞ் செவிடனுமான ஒருவனை அவர் சமூகத்திற் கூட்டிவந்து, அவர் தமது கரத்தை அவன்மேல் வைக்கும்படி மன்றாடினார்கள். அவரோ சனக்கூட்டத்தினின்று அவனைத்தனியே அழைத்துக்கொண்டுபோய் அவனுடைய செவிகளுக்குள் தம்முடைய விரல்களை வைத்தார்; உமிழ்ந்து அவனுடைய நாவைத்தொட்டார்; வானத்தை அண்ணாந்துபார்த்து பெருமூச்செறிந்து, எப்பேத்தா என்று அவனுக்குச் சென்னார்; அதற்குத் திறக்கப்படு என்று அர்த்தமாம். அக்ஷணமே அவனுடைய செவிகளும் திறக்கப்பட்டு, அவன் நாவின் கட்டும் அவிழ்க்கப்படவே, அவன்செவ்வையாய்ப் பேசினன். மேலும், எவனுக்கும் அதைச் சொல்லாதபடி அவர்களுக்குக் கட்டளையிட்டார். ஆயினும், அவர் எவ்வளவு அதிகமாய் அவர்களுக்குக்கட்டளையிட்டாரோ அவ்வளவு அதிகமாக அவர்கள் அதைப்பிரசித்தப்படுத்தி: இவர் எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்; செவிடரைக் கேட்கவும், ஊமைகளைப்பேசவும் செய்தருளினரென்று சொல்லி மேன்மேலும் அதிசயப்பட்டார்கள். கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## சந்தீயோகுமையோர் திருநாள்

மன்னார்த்தீவிலே இன்னும் அழியாதனவாய்ப் பத்துக்கு மேற்பட்ட கோவில்கள் இங்குவசிக்கும் மகாகுல கமண்டலரால் பாதுகாக்கப்பெற்று வருடந்தோறும் திருநாட்களும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுவருகின்றன. இக்கோவில்களில் தலைமன்னாரிலே கட்டுக்காரன்குடியிருப்பிலுள்ள சந்தீயோகுமையோர்கோவிலும்ஒன்றாகும். இதிலே இவ்வர்ச்சியசிஷ்டரின்திருநாள் சென்றஆடிமாசம் 25-ந்திகதி மிகவும் பத்தியருட்சிக் குரியவிதமாய்க் கொண்டாடப்பட்டது. அதற்குமுந்திய நாள் பேசாலைக்கட்டளைக்குரவர் வண. சிங்கராயர்சுவாமிஅவர்களால் மாலையாராதனை பாடப்பட்டது. பின்னர் அன்றிரவு சந்தீயோகுமையோரின்சரிதை நாடகரூபமாகக் கமண்டலகுலக் கிறீஸ்தவர்களால் நடிக்கப்பட்டது. திருநாளன்றுகாலை தலைமன்னார்க்கட்டளைக்குரவர் வண. டேவிற் சுவாமியவர்களால் பாடற்பூசைநிறைவேறியது. பூசைமுடிந்ததும் அர்ச்சியசிஷ்டரின் திருச்சுரூபம் அழகிய கேடயத்தில்வைத்து ஈராயிரவருக்கு மேற்பட்டமக்கள் புடைசூழ்ந்துவரச் சுற்றுப்பிரகாரமாகக் கொண்டுசெல்லப்பட்டது. இத்திருநாளைக்கொண்டாடிய சகலருக்கும் சந்தீயோகுமையோர் வேண்டியவரங்களை ஈண்டு குறைவின்றிப் பெற்றளிப்பாராக.

சேவற்பதியாளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்பொன் யூபிலிவிழா

— அர்ச். சூசையப்பர்கூட்டம் —

யாழ்ப்பாணத்திலுள்ள பத்திக்கூட்டங்களுள் மிகப்பழையதும், ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வாலிபர்களைத் தேவபத்தியிலும் சன்மார்க்கத்திலும் இனிதேவளர்த்து அளவிடற்கரிய இகபரநலன்களைப் புரிந்துவருவதுமாகிய அர்ச். சூசையப்பர் கூட்டமானது சென்ற 1948-ம்ஆண்டு பரமபதம் அடைந்தவரும், பல்வேறு பத்திக்கூட்டங்களின் தாபகரும், போஷகருமான வண. ஈயூஜின் குருசோவிறதர் அவர்களால் அப்போது யாழ்ப்பாணமேற்றிராணியாராய் விளங்கியிருந்த ஹென்றி யூலன் ஆண்டவர்அவர்களின் அனுமதியுடன் 1899-ம்ஆண்டு அடியிடப்பெற்றது. ஆதலின் அதன்ஐம்பதாம் வருட நிறைவுவிழாவாகிய செம்பொன் யூபிலியை நிகழும் 1949-ம்ஆண்டிலே கொண்டாடும்பாக்கியம் அக்கூட்ட அங்கத்தவர்களுக்குக் கிடைக்கலாயிற்று.

இந்தயூபிலிவிழா சென்றஆடிமாசம் 24-ந்திகதி ஞாயிறுவாரம் கூட்டச் சிற்றாலயத்திலே பத்தியருட்சியாய்க் கொண்டாடப்பெற்றது. இதற்கு ஆயத்தமான திரிதினஉற்சவங்கள் முந்திய வியாழன், வெள்ளி, சனியாகிய முத்தினங்களிலும் காலைதிவ்வியபூசையுடனும், மாலை செபமாலை, திவ்வியசற்பிரசாதஆசீர்வாதம், சுரூபஎழுந்தேற்றம் ஆகியவற்றுடனும் நடந்தேறின. அங்கத்தவர்கள் எடுத்துக்கொண்ட அயராமுயற்சியின்பயனுகக் கோவிலும், கூட்டமைதானமும், சுற்றுடல் வீதிகளும் பந்தர்களாலும், சித்திரத்தட்டிகள் பசுந்தளிர்களாலும், அழகிய மலர்மாலைகள், பலவர்ணத் துவசங்களாலும் அழகுறச் சிங்காரிக்கப்பெற்றிருந்தன. யூபிலிவிழாவன்றுகாலை 7 மணிக்கு யாழ்ப்பாணத் துணைமேற்றிராணியாரான மகாவந். J. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர்அவர்களால் யூபிலித்தோத்திரப்பூசை நிறைவேறியது. அவ்வேளை முதியவர்களும், இளைஞர்களும், வாலிபர்களுமாகப் பன்னூற்றுக்கணக்கானோர் சமுகமாயிருந்து, திவ்வியநன்மைபெற்றுத் தங்கள் நன்றியறிந்த தோத்திரங்களைத் தேவதேவனுக்கும், அவர் திருக்கைத்தாதைக்கும் சமர்ப்பித்தார்கள். அன்றியும் தங்கள்கூட்டத்தாபகரான வண. குருசோவிறதரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக விசேஷசெபங்களும்செய்து ஒப்புக்கொடுத்தனர்.

திவ்வியபூசையின்பின் துணைமேற்றிராணியாண்டவருக்குக் கூட்டத்தின் பேரால் ஓர்வரவேற்புஉபசாரம் அளிக்கப்பட்டது. கோவில்முன்றிலில்அமைக்கப்பெற்றிருந்த சிங்காரப்பந்தரிலே அவர்உயராசனத்தெழுந்ததும் முதிய அங்கத்தவரின்மூப்பர் திரு. யோ.மனுவேற்பிள்ளை புஷ்பாஞ்சூட்டினர். சிறுவர் இனியகீதங்கள் இசைத்தனர். கூட்டச்செயலாளர் திரு. அ. பி. முத்தையா வரவேற்பு உபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்தனர். நிருவாகசபை அக்கிராசனர் திரு. ச. பிரான்சீஸ்மேரி அவர்கள் தெட்சணைசமர்ப்பித்தனர். ஆண்டவர்அவர்கள்எழுந்து தகுந்த நன்மதிபுகன்று திருக்கரஆசிஈந்தனர். அதன்மேல் அங்கத்தினர் யாவரும் மேற்றிராசனமாளிகைசென்று மகாவந். மேற்றிராணியாண்டவரைச் சந்தித்து யூபிலிமகிழ்வும், நன்றியறிதலும் தெரிவித்து அவர்திருமொழிகேட்டு ஆசிபெற்று மீண்டனர்.

சாயந்தரம் கூட்டத்தின் மகிமைவிருதாளிகளில் ஒருவராகிய வண. J. F. சேவியர்சுவாமியவர்கள் வெஸ்பர் பாடியபின்னர் அங்கத்தவர்களின்கடமைகளைவிளக்கி அரியதோர்பிரசங்கஞ் செய்தனர். அதன்மேல் மாதவவளரின் திருச்சுரூபத்தை அழகியகேடகத்தில் எழுந்தருளச்செய்து, சகோதரபத்திக்கூட்டங்களைச்சேர்ந்தோரும் சங். கன்னிகாஸ்திரிமாரும், பிறருமாய் வந்துகுழுமிய பக்தர்குழாம் பாவாலும் நாவாலும் வாழ்த்தித்துதித்து இருநிரையே முன்செல்ல, சிங்காரிக்கப்பெற்ற வீதியூடே சுற்றுப்பிரகாரம் நடந்து கூட்டமைதானத்தை அடைந்ததும், அங்கு தேசோமயமாய் அழகுற்றுவிளங்கியபந்தரிலே திருச்சுரூபத்தை எழுந்தருளச்செய்து காணிக்கைச் செபம் சொல்லப்பட்டது. பின்னர் வண. அன்ரன் இராசகாரியர் சுவாமியவர்கள் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளினர். ஈற்றிலே சிற்றுண்டி உபசாரணை நிகழ்ந்தது. அவ்வேளை வண. J. A. இராசநாயகம்சுவாமியவர்களாலும் அங்கத்தவர்கள் சிலராலும் கூட்டவரலாறுகள், முன்னேற்றங்கள் பற்றி அரியசொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. மறுநாட்காலை 6 மணிக்கு மாணித்தஅங்கத்தவர்களுக்காகத் திவ்வியபூசை நிறைவேறியது.

கூட்டத்தின் ஆரம்பத்திலே அதிற்சேர்ந்து இந்நாள்வரை நிலைத்திருந்து தங்கள் ஐம்பதாம்வருட செம்பொன் யூபிலியைக்கண்டுகளிக்கும்பாக்கியமும் இருஅங்கத்தவர்களுக்குக் கிடைக்கலாயிற்று. வண. B. ஆபிரகாம்சுவாமியவர்களும், திரு. க. யோசேப்பு சின்னையா அவர்களுமே அவ்விருவருமாவர். கௌரவமிக்க அவ்விருஅங்கத்தவர்களதும் செம்பொன்யூபிலி 31-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பரிமளிப்பாக்க் கொண்டாடப்படலாயிற்று. சுகத்தாழ்வுகாரணமாக வண. B. ஆபிரகாம் சுவாமியவர்கள் யூபிலிநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளஇயலாதிருந்தமை அங்கத்தவர்களுக்கு மனமடிவைக் கொடுத்ததாயினும் காலை 11 மணியளவில் அவர்கள்திரண்டு திரு. க. யோசேப்பு சின்னையாஅவர்களை அழைத்துச் சென்று உயராசனத்தமரச்செய்தனர். முதியஅங்கத்தினர்மூப்பர் திரு. யோ. மனுவேற்பிள்ளை மலர்மாலைசூட்டினர். வாலிபமூப்பர் திரு. யோ. அந்தோனிப்பிள்ளை சோபனோபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்தனர். நிருவாகசபை அக்கிராசனர் திரு. ச. பிரான்சீஸ்மேரி அவர்கள் யூபிலி ஞாபகசின்னம் வழங்கினர். யூபிலிநாயகர்எழுந்து தமக்குச்செய்யப்பட்ட உபசாரத்துக்காக நன்றிதெரிவித்துப்பேசியபோது: வண. கூட்டத்தாபகரின் அரியநன்மதிகளைக் கடைப்பிடித்தொழுகப்பிரயாசித்துவந்தமையே 50 வருடங்களாகத் தாம்கூட்டத்தில் நிலைத்திருக்கக் காரணமெனக் கூறி, ஏனைய அங்கத்தவர்களும் கூட்ட ஒழுங்குகளைப் பிரமாணிக்கமாக அனுசரித்து நிலைத்திருக்குமாறு யாவரையும் ஏவிவிடலாயினர். உருமத்தின் போது மூப்புச்சுவாமியாராகிய மிகவண G. A. குருசாமி சுவாமியவர்கள் தலைமையில் சம்பிரமமான விருந்துபசாரணை நிகழ்ந்தது. அவ்வேளை கூட்ட உபகாரிகளுக்கு நன்றிதெரிவித்தும், யூபிலிவிழாநிகழ்ச்சிகளில் பங்குபற்றினோர், பற்பலஉதவிகள் புரிந்தோரைப் பாராட்டியும் திரு. அ. பி. முத்தையா அவர்கள் சுருக்கமானதோர் நன்றியுரை புகன்றார். கூட்டத்தாபகரான வண. குருசோவிறதர் அவர்களின் சேவைகளைப்பாராட்டித் திரு. மா. சவிரிமுத்துஅவர்களும், கூட்டவிருத்தி பற்றித் திரு. யோ. மனுவேற்பிள்ளை அவர்களும் சொற்பொழிவாற்றினர். ஈற்றில் மிகவண. மூப்புச்சுவாமியார் அவர்கள் அரியபுத்திமதியுரைத்து ஆசிஈந்தனர்.

சஞ்சூசையப்பரின் அடைக்கலத்தில் அவர்தம் பூங்கொடிநிழலில் தாபிக்கப்பட்டுள்ள இக்கூட்டமானது மேன்மேலும் விருத்திபெற்றோங்கி எம்மவர்க்கோர் நிரந்தரஆசீர்வாதமாய் நிலவ எல்லாம்வல்லஇறைவன் திருவருள்பாலிப்பாராக.

—ஓர் அங்கத்தவன்

# மாதோட்டத்தபால்

[ நாட்டுத்தூதன் ]

ஐயா! நாடுநன்மைபெற்று முன்னேற வேண்டுமேயானல் அங்கு கோணுநீதியும், பொதுநலவிருப்பும் நிலைகொள்ளவேண்டும். முகஸ்துதியும், அநீதியும், வஞ்சகமும், பொறுமையும் அகன்று சகோதரத்துவமும், கடவுள் பற்றும் தலையெடுக்கவேண்டும். 'இழிமொழி' பழிமொழிகளை அகற்றி இன்மொழிகளை வழங்குதல் எப்போதும் நன்மை பயப்பதாகுமென்றே தூதன் கருதுகின்றான்.

**மாந்தைக்குடியேற்றம்**:—பண்டைக்காலத்தில் மங்காப்புகழுடன் மாண்புற்றிலங்கியதும், தற்போது பற்றைக்காடுபரந்து பாழ்நிலை அடைந்திருப்பதுமான மாந்தைப்பதியில் மீண்டும் சனங்களைக் குடியேற்றிவைக்க முயற்சிநடப்பதாக அறிந்து தூதன்சந்தோஷித்து இதுவிஷயமாய்ச் சாதி சமயபேதம்பாராது நிதார்த்தமாக நடந்துகொள்ளுமாறு பெரியதலைமைக்காரரையும், மற்றும்பெரியாரையும் பரிவாகவேண்டிக்கொள்ளுகின்றான்.

**திறைஅதிகாரிகள் கந்தோர்**:—மன்னூர்ப்பகுதியின் முப்பிரிவுகளுள்ளும் மன்னூரிலும், மாந்தையிலும் புதியதிறைஅதிகாரிகளின் கந்தோர்கள் அமைக்கப்பட்டுவிட்டன. முசலிப் பிரிவின் மத்தியதானமாகிய நானூட்டானிலே தற்போது அப்பிரிவின்காரியாதிகாரியாலயத்தை நவமாய் அமைக்க நடவடிக்கைஎடுக்கப்பட்டு வேலைஆரம்பமாகவிருக்கிறது. இங்கு தொண்டாற்றும் திறைஅதிகாரி திரு. பிள்ளைநாயகம்அவர்கள்நற்பரிபாலனஞ்செய்துவருவதாக அறிவது மகிழ்ச்சிதருவதாகும்.

**தபால்–தந்திவசதி**:— இவ்வசதிகள் விஷயமாக மந்திரி சிற்றம்பலம் அவர்கள் இங்கு பெரும் முயற்சியெடுத்து, உடன்வேலைசெய்து வருவது விரும்பப்படத்தக்கது. எஞ்சியிருந்த இடங்களாகிய அடம்பன், விடத்தல்தீவும் இப்போது தெலிபோனுல் இணைக்கப்பட்டுவிட்டன. அன்றியும் ஆத்திமோட்டை, பாப்பாமோட்டை, புதுவெளி, ஆட்காட்டிவெளி, வெள்ளாங்குளம் என்பனவற்றில் உபதபாற்கந்தோர்களை ஸ்தாபிக்க நிச்சயிக்கப்பட்டுவிட்டது.

**பழம்பெருங்குளங்கள்**:—மன்னூர்ப்பகுதியிலுள்ள புராதனபாரிய குளங்களும், இதுகாலவரை சேர்லைக்காட்டால் சூழப்பட்டு எவராலும் கவனிக்கப்படாமல் கிடந்தனவுமாய் விடத்தல்தீவுக்கு அண்மையிலுள்ள "சன்னூர்க்" குளத்தையும், மருதமடுத் திருப்பதிக்கும், பாலம்பிட்டிக்கும் இடையிலுள்ள தட்சணுமருதமடுக்குளத்தையும் திருத்திவைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இவை பூர்த்தியுறும் போது மன்னூர்ப்பகுதி முழுவதுமே செந்நெல்செறிந்தநாடாக விளங்குமெனலாம்.

**சிறுபோகம் எப்படி?**:—அன்றொருநாள் மாந்தைச்சந்தியிலே மன்னூருக்குப்போகும் பஸ்வண்டியைப் பார்த்துநின்ற காற்சட்டைதரித்த ஒருவர் விடத்தல்தீவுக்குப்போக வெளிப்பட்டஓர்இந்திய உழவனைநோக்கி: இம்முறை சிறுபோகம் எப்படி? என வினவினாராம். அதற்கு அக்கிருஷிகன் பொதுவில் ரொம்பநல்லாய்த்தான் இருக்குதுங்க; அதிலும் உங்களைப் போலும் பெரியாள்கள் சிலருக்கு எல்லா ஊருக்குளங்களிலும் குறைச்சலில்லாது சிறுபோகம் விதைத்து இருக்குதுங்க; அவங்கபாடு இந்தமுறை ஒருஅள்ளுத்தானுங்க என்று ஒருபென்னம்பெரிய பெருமூச்சுடன் விடையிறுத்துப்போயினனும். இதுவும் சுதந்திரஆட்சியின் நவீனங்களில் ஒன்றுபோலும்.

# பிரியாவிடை வைபவம்

ஆடிமாதம் 26-ந்திகதி செவ்வாய்க்கிழமை பண்டத்தரிப்புக் கத்தோலிக்க பாடசாலையும், மைதானமும், துவசதோரணங்களால் கலகலக்க, நாதசுரவாத்தியங்கள் முழங்கின. மணிகளெல்லாம் ஊரவரை அழைத்தன. 34 வருடகாலம் அருஞ்சேவை ஆற்றிய ஆசிரியை அன்னம்மாஅவர்கள் இளைப்பாறுவதுபற்றியே எங்கும் பேச்சாயிருந்தது. சாயந்தரம் நாலுமணியிருக்கும். வண. சுவாமி றெனல்ட்அவர்கள் தலைமையிலே பாடசாலையில் மாபெருங்கூட்டமொன்று கூடியது. பழைய மாணவர்களால் வண. சுவாமியவர்களுக்கும், ஆசிரியை அன்னம்மாவுக்கும் மலர்மாலைகள் சூட்டப்பட்டன. ஆசிரியையின் அரும்பெருந்தொண்டு, எல்லோர்க்கும் ஏற்கச்சீவி[illegible]க பெருந்தன்மை, அவரில்பிரகாசித்த அரியநற்குணங்கள் என்பவைகளை எடுத்துக்காட்டிய பிரியாவிடைப்பத்திரம் ஓர்மாணவனால் படித்துக்கொடுக்கப்பட்டது. திருஇருதயநாதரின் திருச்சுரூபமொன்றைப் பழையமாணவர் மாணவிகள் ஞாபகசின்னமாக வைத்துப் பணிந்தார்கள். வண. சுவாமியவர்களும், சிலபிரமுகர்களும், மாணவிகளும் ஆசிரியையைப் பாராட்டிப் பேசினார்கள். இடையிடையே எல்லோர்மனத்தையும் கவரக்கூடிய நன்றியறிதல்ததும்பிய பாக்கள் படிக்கப்பட்டன. பெரியகரகோஷத்தினிடையே ஆசிரியைஎழுந்து தனது அன்பையும், நன்றியையும் தெரிவித்து நின்றார். பாடசாலைச்சிறுவரால் நடாத்தப்பட்ட கதம்பக்கச்சேரியோடும், ஆசிரியைஅவர்களின் வீட்டில் நடந்த விருந்து உபசாரணையோடும் கொண்டாட்டம் நிறைவேறியது.

—நிருபர்

**ஆமையும் கோழியும்**:—ஆமை ஒரேமுறையில் ஆயிரம்முட்டைகள் இட்டாலும் ஆர்ப்பாட்டஞ்செய்து தன்னைவெளிக்காட்டாது அமைதியாகவும், அடக்கமாகவும் இருந்துவருமெனவும், கோழி ஒருமுட்டையிட்டவுடன் கொக்கரித்து ஊர்முழுவதுக்கும் தன்னைக்காட்டி நிற்குமெனவும் நாடோடியாகச் சொல்லிக்கொள்ளுவார்கள். அப்படியே பெருங்குணம் நிறைந்த பரம்பரைப்பெரியார் ஓர் பொது நன்மையான கருமத்தைச் செய்தால் தம்பெயர் வெளிவாரமல் அடக்கவொடுக்கமாக இருந்துகொள்வர். அற்பகுணம் படைத்தோர் ஏதோ ஒன்றைத் தட்டித்தடவிச் செய்துவிட்டால் அண்டமும் அதிரும்படி கூச்சலிட்டு உலகம்அறியும்படிசெய்து நிற்பர். இவர்களுக்கு ஆமையின் பாடமும் ஒரு அருமையான பாடந்தான்.

**தவணைமுடிவுவிழா**:—நாவற்குளக் கத்தோலிக்கபாடசாலையிலே 3-8-49 மாலை இவ்விழாசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பாடசாலையும் பந்தரும்சிங்காரிக்கப்பட்டிருந்தன. வண. ஜே. சிங்கராயர்சுவாமியவர்களும் வேறுசிலரும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். மாணவர்களால் நடிக்கப்பட்ட அர்ச். செபஸ்ரியார் டிருமாவுடன் விழாமுடிவெய்தியது.

—தூரகிழக்குத் தேசங்களிலே பிலிப்பைன்ஸ் தீவுகளுக்குப்பின் அதிகம் கத்தோலிக்கநாடாய் விளங்குவது, தொங்கின், அனம், கொச்சின்-சீன் மாகாணங்கள் என்பனவற்றை அடக்கிய வியெற்னம்நாடேயாகும். இதன் குடிசனங்களில் இருபது லட்சம்பேர் கத்தோலிக்கராவர்.

—சீனதேசத்திலே தற்போது 32,74,740 கத்தோலிக்கர் இருந்துவருவதாக அதிகம்பிந்தியபுள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. அங்குமூன்று கத்தோலிக்க சர்வகலாசாலைகளும், 189 கத்தோலிக்க மத்தியகலாசாலைகளும், 2011 கத்தோலிக்க ஆரம்பகலாசாலைகளும் இருந்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் அர்ச். ஆரோக்கியநாதர் திருநாள்

கடற்கரைத் தெருவிற்கணித்தாய்க் கட்டப்பட்டுள்ள புதுக்கோவிலில்திருச்சுரூபம் கொண்டெழுந்தருளிப் பலவகையான நோய்களால் பீடிக்கப்பட்டோருக்கெல்லாம் பெரும் சகாயங்களைப் புரிந்துவரும் அற்புதவரத்தர் ஆராதிஷ்ட ஆரோக்கியநாதரின் வருடாந்த திருநாட் கொண்டாட்டங்கள் இம்மாதம் 16-ந்திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 27-ந்திகதி சனிக்கிழமை பெரிய பாடற்பூசையுடனும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும் முடிவாகும்.

கவனிப்பு:—காணிக்கை மெழுகுதிரிகள் கோவிற்பொறுப்பில் விற்கப்படுவதால் எவரும் கோவிலுக்கருகாமையில் மெழுகுதிரிவிற்க உத்தரவில்லை.

P. T. யேம்ஸ், O. M. I.
கட்டளைக்குரு.

# சத்தியவேத பாதுகாவலன்

1949-ம் ஆண்டு
ஆவணி மாசம் 18-ந் திகதி

## குருத்துவ வெள்ளி யூபிலி

தாம் மேற்றிராணித்துவ அபிஷேகம் செய்யப்பெற்றபின் மகாவந். நம்மேற்றிராணியாண்டவர்அவர்கள் முதன்முதலாகக் குருத்துவாபிஷேகம் செய்து வைத்த ஐரோப்பிய குரவர்கள் இருவரும் தேவனின் திருவருளாலே கடந்த இருபத்தைந்து ஆண்டுகளிலும் வடஇலங்கைத் திருச்சபை உத்தியானத்திலே குன்றாத தேவதோத்திர வாஞ்சையோடும், குறையாத ஆன்ம இரட்சணிய ஆர்வத்தோடும் திருத்தொண்டாற்றிவந்து நிகழும் ஆவணிமாதம் 10-ந்தேதி தங்கள் குருத்துவவெள்ளியூபிலியைக் கொண்டாடும் பெரும்பாக்கியத்தைப் பெற்றுக்கொண்டார்கள். தற்போது மருதமடுத்திருப்பதிப் பரிபாலனராகப் பிரஸ்தாபமுற்றிலங்கும் வண. ஜே. புறோகன் சுவாமிகளும், நெடுந்தீவுக் கட்டளைக்குரவராகப் பிரபலம் பெற்றுவிளங்கும் வண. எல். டெசி சுவாமியாருமே யூபிலிநாயகர்களான இருகுருப்பிரசாதிகளுமாவர்.

வண. யூலியன் புறோகான் சுவாமிகள் குருப்பட்டம்பெற்றபின் முல்லைத்தீவிலும், யாழ்ப்பாணம் அடைக்கலமாதா கோவில், சந்தியோகுமையோர் கோவில் விசாரணைப்பங்குகளிலும், நமது அச்சியந்திரசாலையிலும் தொண்டாற்றிவந்து 1939-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 28-ந்திகதி மருதமடுத்திருப்பதிப் பரிபாலனராக நியமனஞ்செய்யப்பெற்றார். அப்பதிப் பரிபாலனர்களாயிருந்து அதன்சிறப்புக்காக அயராதுழைத்துவந்த வண. ஒலிவ், வண. உக்தின் எனும் குரவர்களைத்தொடர்ந்து அதன் பரிபாலனராகவந்த யூபிலிநாயகரான சுவாமியவர்களும் சென்றபத்துவருடங்களிலும் அதனைப் பன்மடங்கு சிறந்தோங்கச்செய்து ஸ்ரீலங்காவின் முதன்மைவாய்ந்த திருக்ஷேத்திரங்களில் ஒன்றாய்த் திகழவைத்திருக்கின்றார். செபமாலையின் மேற்றிராணியாரெனச் சிறப்புப்பெயர் தாங்கும் நம்மேற்றிராணியாண்டவரது மதியூகம் வாய்ந்த வழிநடாத்துகையின்கீழ் இவர்காலத்திலே அதாவது 1940-ம் ஆண்டு செபமாலைத் தியானப்படங்கள் ஸ்தாபிக்கப் பெற்றுச் செபமாலைப்பத்தி முயற்சி முன்னிலும் அதிகமாக விருத்தியடையலாயிற்று. 1944-ம் ஆண்டு ஆனிமாதம் 26-ந் திகதி மடுநாயகியின் திருஆலயம் பெரிதும் ஆடம்பர வைபவங்களுடன் அபிஷேகஞ் செய்யப்படலாயிற்று. பொதுவிலே கூறுமிடத்து, அப்பதி தற்போது அடைந்திருக்கும் மங்காப்பெருமைக்குச் சுவாமியவர்களின் அயராஉழைப்பே காரணமெனலாம். அதனல் அப்பதி அடைந்துகொண்டு வருகின்ற பெரும்பிரஸ்தாபத்திற்கேற்க, அதன் பரிபாலனரான சுவாமிஅவர்களின் நாமமும் சாதிசமயபேதமின்றிப் பிரஸ்தாபமடைந்து வருகிறதெனில் மிகையாகாது. அதனல் அப்பதிச்சரித்திரத்தில் சுவாமியவர்களின் நாமமும் அழியாப்புகழ் பெறுமெனக் காத்திருக்கலாம். சென்ற ஆடிமாதம் தனதுநடு நாயகமாகிய பரிசுத்தசெபமாலை நாயகியின் அற்புத திருச்சுரூபத்துக்குத் திருமுடிசூட்டிய வெள்ளியூபிலி விழாவையும், மகத்துவமிக்க தனது திருக்ஷேத்திரத்தை அமலோற்பவ மரியநாயகி சபைக்குருமார் பொறுப்பேற்ற நூற்றாண்டு விழாவையும், நம்மேற்றிராணியாண்டவரின் வெள்ளியூபிலி விழாவையும் கண்டுகளித்த மருதமடுத்திருப்பதி இன்று தனது பெருமைவாய்ந்த பரிபாலனரான சுவாமியவர்களின் யூபிலியைக் கண்டுகளிப்பதும் அதன் பெரும்பாக்கியமே என்க.

மற்றைய யூபிலிநாயகமாகிய வண. லூயிஸ் டெசி சுவாமி அவர்கள் குருப்பட்டம் பெற்றபின் வவுனியாவிலும், சில்லாலையிலும் திருத்தொண்டாற்றித் தமது மதுரகுணத்தாலும் அயராமுயற்சியாலும் அந்த விசாரணைப்பங்குகளில் மாத்திரமல்ல, அங்குள்ள தமதுஞானமக்களின் இதயங்களிலும் அழியாத ஞாபகசின்னங்களை அமைத்துவிட்டபின் இன்று நெடுந்தீவின் பெரிய கட்டளைக்குரவராய் விளங்குகின்றார். சுவாமிஅவர்கள் அங்கு இதுகாலவரை ஆற்றியுள்ள அருந்தொண்டுகளை எடுத்துக்கூறுவது இலகுவன்று. அங்குள்ள ஏழுகோவில்களையுமே அவர்திருததிப் புதியகோவில்கள்போன்று எழில்பெறச் செய்திருக்கின்றார். கன்னிகாமடம் ஒன்றைக் கட்டியிருக்கின்றார். பாடசாலைகள் மட்டில் மிகுந்த ஆர்வமுடையராய் அவற்றிலே மிக்கானகரிசனையெடுத்து, பிள்ளைகளுக்கு ஞானோபதேசம் படிப்பித்து, அதிலே திறமைகாண்பிக்கும் பிள்ளைகளுக்கு வெகுமதிகள்வழங்கியும், ஏழைப்பிள்ளைகளுக்குப் புத்தகங்கள், உடுப்புகள் ஆதியன உதவியும், ஆசிரியர்களின் கௌரவத்தையை உணர்ந்து அவர்களைக் கண்ணியமாக நடாத்தியும், சுகாதாரத்துக்கேற்ற வீடுகளைக்கட்டும்படி மக்களுக்கு உற்சாகமளித்தும், நோவாய்ப்பட்டாரைச் சந்தித்து ஆறுதலளித்தும், வீடுகள் எரிந்து கஷ்டப்படுவாருக்கு ஆனஒத்தாசை புரிந்தும், கோவில்திருப்பணிகள் நடைபெறுங்கால் தாமும் பணியாளருள் ஒருவராய்நின்று கல், மரம் ஆதியன தூக்கிக்கொடுத்தும், பிற உதவிகள்புரிந்தும், தமக்கு என்ன வருத்தமிருந்தாலும் பிரசங்கஞ்செய்தும் இவ்வாறான பல அருஞ்சேவைகளாலே இக்கால மாங்கோசுவாமியாரென்றும், நெடுந்தீவின் புதிய சந்திரசேகர சுவாமியாரென்றும் கொண்டாடப்படுகின்ற சுவாமியவர்களின் புன்னகையும் இன்மொழியும் ஆயிரம்பொன் பெறுமெனலாம். அவரது மலர்ந்தவதனமும், கனிந்தஉளமும் எவர்க்குமே ஆனந்தம் பயக்குமெனலாம். இன்னும் சுவாமியவர்கள் தமிழில் மிக்கான ஆர்வம் படைத்தவர். "தங்கமணி", "நானே குற்றவாளி" எனும் தலையங்கங்களுடன் அவர் இயற்றியிருக்கும் நற்படிப்பனைக்குரிய கற்பனைசரிதைகளே அதற்குப் போந்த சான்றாகும். அவர் சீமைத்தேசம் சென்றிருந்தபோது, அங்கே தமிழ்'ரைப்றைற்றர்' ஒன்று செய்வித்து வந்தமையும் பாராட்டத்தக்கதே. அழுவாரோடு அழுது, மகிழ்வாரோடு மகிழ்ந்து, அன்புமிக்க ஓர்பிதாவைப்போல்விளங்கும் சுவாமியவர்கள் சிலமாசங்களின்முன் கடினநோய்வாய்ப்பட்டிருந்தபோது நெடுந்தீவுமக்கள் கண்ணீர்பெருகக் கடவுளைக் கையெடுத்துச் செய்தவேண்டுதல்களே அவர்மாட்டு அவர்கள் கொண்டிருந்த அன்பைப்பிரத்தியட்சப்படுத்தின என்க.

யூபிலிநாயகர்கள் இருவரோடும் சேர்ந்து நாமும் இந்தவேளை சருவேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரநமஸ்காரம் செய்கின்றோம். இன்னும் பல்லாண்டு இவர்கள்நம்மத்தியிலே நல்லூழியம் புரிந்துவர இறைவன் திருவருள்பாலிப்பாலிக்குமாறு இரந்து நிற்கின்றோம்.

## மரியாயின் மாசில்லாத இருதயத் திருநாள்

அப்போஸ்தலராகிய அர்ச்சியசிஷ்ட இராயப்பர் கட்டுரைத்தவாறு, அழிவுக்குரியபொன்னினாலும், வெள்ளியினாலுமல்ல, விலைமதிக்கரிய தேவஉதிரத்தினாலேயே நாம் மீட்டிரட்சிக்கப் படலானோம். இந்தத்திவ்விய உதிரத்தின் நிலைக்களமாகிய தேவஇருதயத்தை உருவாக்கியது தேவதாயாரின் மாசில்லாதஇருதயமே. இந்தமகாபரிசுத்த இருதயம் தேவன்மீதும், மனுமக்களாகிய எங்கள்மீதுங்கொண்ட பேரன்பு கொழுந்துவிட்டெரியும் இருதயம். இரக்கமும் தயாளமும்நிறைந்த இருதயம். தேவஅருட்பிரசாதம் தேங்கிவழியும் இருதயம். சர்வபுண்ணிய சம்பன்னமாக மிளிரும்இருதயம். அர்ச். மார்கறெற்மரியம்மாள் சொல்லுமாறு, திவ்வியஇரட்சாநாதரின் தெய்வீகஇருதயப்பத்திக்கு வழிநடத்தும்இருதயம். நீதிமான்கள்மீது மாத்திரமல்ல, பாவவாளர்மீதும் அருள்மாரிபொழியும்இருதயம். அண்டிவரும் அனைவருக்கும் அபயங்கொடுக்கும் இருதயம். பத்தி நம்பிக்கையாக ஓலமிட்டுமன்றாடும் எல்லோரையும்சீவியகாலத்திலும், மரணத்திலும் தப்பாமல் ஆதரிக்கும்இருதயம்.

திருச்சபைஅதிகாரிகள்பதின்மூன்று வருடம் பரிசோதனைசெய்து உண்மையும், நம்பிக்கைக்குரியதுமென நிச்சயித்த பத்திமாதிருப்பதிக் காட்சியின்போது 1917-ம் ஆண்டு ஆடி மாதம் 13-ந் திகதி தெளிவாக வெளிவந்தபிரகாரம், தேவதாயாரின் மாசில்லாத இருதயப்பத்தி உலகிலே தாபிக்கப்பட வேண்டுமென்று தேவனே திருவுளமாயிருக்கின்றார். மனுமக்களைத் திகிலுறுத்திவரும் அவவிசுவாசம், பேரின்பம்பொய், சிற்றின்பமேமெய் என்ற குருட்டுக்கொள்கை, சனசாகியங்களிடையே குரோத வைராக்கியம், பரநலத்தை உபேட்சித்துச் சுயநலம் ஒன்றையே அபேட்சிக்குங் குணதோஷம், சனசங்கார யுத்தக்குறிகள் முதலான அபாயங்கள் அகன்றொழிந்து, நீதியும் பிறர்நேசமும் சமாதானமும் எங்கும் நிலவுதற்கு வேண்டிய ஒத்தாசையைப்பெற அத்தாயாரின் மாசில்லாத இருதயப் பத்தியை மனவாஞ்சையுடன் அநுட்டித்து இம்மாசம் 22-ந்திகதி வரும் அவாது இருதயத் திருநாளைக் கொண்டாடுவோமாக! மாதாவின் மாசில்லாத இருதயப் பத்தியை உகப்பானவிதமாய் அநுட்டித்தற்கு நாம் கையாளத்தக்க பத்திமுயற்சிகள் யாவை? பத்திமாதிருப்பதிக் காட்சிவைபவத்தினாலேயே அவை எவையென வெளிவந்திருக்கின்றன.

முதலாவது: பத்திமாநாயகி ஏவிய பிரகாரம் நமதுபரிசுத்தபிதா 12-ம் பத்திநாதர் திருச்சபைமுழுவதையும், மனுமக்கள்சகலரையும் மாசில்லாத மாதாவின் மகாபரிசுத்த இருதயத்துக்குஒப்புக்கொடுத்தவண்ணம், நாமும் நம்மையும், நமது குடும்பங்களையும் அதற்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுப்போமாக. நாம் துர்நெறிவிட்டு, நன்னெறிப்பட்டு, பிள்ளைக்குரியநேசத்தைக் காண்பித்துவரின், மாதாவின் மாசில்லாதஇருதயம் தாய்க்குரிய நேசத்தோடு நமக்கு அடைக்கலம் அருளிவரும் என்பதற்கு ஐயப்பாடுண்டோ?

இரண்டாவது: நாம் ஈடேறவும், பாவிகளை மனந்திருப்பி ஈடேற்றவும் செபவேண்டுதலும், ஒறுத்தல்முயற்சியாகிய மனப்பலியும் ஒப்புக்கொடுத்தல் வேண்டும். செபமாலையை ஏந்தியபிரகாரம் காட்சியளித்த செபமாலைநாயகி செபமாலையை எப்போதும், அடிக்கடியும் செபிக்கவேண்டுமென்று தம்மைக்காணும் பாக்கியம்பெற்ற மூன்று இடைப்பிள்ளைகளிடமும் மீண்டும் மீண்டும்வற்புறுத்திக்கேட்டிருப்பதை அறிந்துள்ளோம். தேவதிருவுளத்தால் நேரிடுந் துன்பதுயரங்களையெல்லாம் தமதுதிருக்குமாரனுக்கு இருதயநோவுண்டாக்கும் பாவங்களுக்குப் பரிகாரமாகவும், பாவிகள் மனந்திரும்புவதற்காகவும் ஒப்புக்கொடுக்கும்படியும் தாயார் கேட்டிருக்கின்றார். "மன்றாடுங்கள், மேன்மேலும் மன்றாடுங்கள், பாவிகளுக்காக ஒறுத்தல் முயற்சிசெய்யுங்கள். அவர்களுக்காக ஒறுத்தல் முயற்சிகளை ஒப்புக்கொடுப்பார் இல்லாமையினாலே அநேக ஆத்துமாக்கள் நரகத்துக்கு ஆளாகிறார்களே" என்று கூறி, மூன்று பிள்ளைகளையும் நோக்கி: "பாவிகளுக்காக உங்களை ஒறுத்துநடவுங்கள். "ஓ! யேசுவே! இதை நான் உமது நேசத்துக்காகவும், பாவிகள் மனந்திரும்பும்படியாகவும், மரியாயின் மாசில்லாத இருதயத்துக்குச்செய்யப்படுந் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும் ஒப்புக்கொடுக்கிறேன்" என்று அடிக்கடி சொல்லிவாருங்கள்" என்றும் புத்திபுகட்டியருளினார்.

மூன்றாவது: தற்போது ஓர் கன்னியாஸ்திரீயாயிருக்கும் லூசியா என்ற சிறுபெண்மணிக்குத் தெரிவித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுக்கொண்டதை அநுசரித்தல் வேண்டும். "என்பிள்ளையே மனிதருடைய அவநன்றியாலும், தூஷிப்பினாலும் சணத்துக்குச்சணம் உள்ளிறங்கும்முட்களினாலே முற்றும்ஊடுருவப்பட்டுள்ள எனது இருதயத்தைப்பார். நீயாவது அதற்கு ஆறுதல்வருவிக்கப் பிரயாசப்படுவாயாக. நான் இப்போது அருளும் வாக்குத்தத்தத்தையும் மனிதருக்குத் தெரிவிப்பாயாக. தொடர்பாக ஐந்துமாசங்களிலே முதற்சனி வாரந்தோறும் எனக்கு நிந்தைப்பரிகாரஞ் செய்யும் நோக்கமாகப் பாவசங்கீர்த்தனத்தினுற் தங்களைச்சுத்திகரித்துத் திவ்வியநன்மை உட்கொள்ளுகிறவர்களும், காரணிக்கத் தேவஇரகசியத்தைத் தியானித்துச் செபமாலைஒதி ஒரு கால்மணிநேரத்தை என்னோடு போக்குகிறவர்களுமாகிய சகலருக்கும் அவர்கள் இரட்சணியத்துக்கு அவசியம்வேண்டிய வரப்பிரசாதங்களை அருளி அவர்களுடைய அந்தியவேளையில் ஒத்தாசை புரிந்தருளுவேன்" என்று வாக்குத்தத்தம்பண்ணுகிறேன். பத்தியுள்ள ஆத்துமாக்கள் தொடர்பாக ஐந்துமுதற்சனிக்கிழமைதோறும் மாத்திரமோ, வருடம் பன்னிரண்டுமாதச் சனிக்கிழமை தோறுமே இந்தப்பத்தி முயற்சியை அநுட்டித்து மாதாவின் மாசில்லாத இருதயத்துக்கு ஆறுதல் அளிக்க முயற்சிப்பார்கள் அன்றோ!

## சுதேச வர்த்தமானம்

### குருமார் ஞானஒடுக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த வண. குருப்பிரசாதிகளின் முதலாவது பிரிவான வருடாந்தஞான ஒடுக்கம் 17-ந்திகதியாகிய நேற்றுச் சாயந்தரம் ஆரம்பமாயிற்று. 40 குருமார்வரையில் சமுகங்கொடுத்திருக்கின்றனர். மன்னார்க் கட்டளைக்குருவரும், மன்னார்-மாதோட்ட மூப்புச்சுவாமியாருமாகிய அதிவண. எஸ். பீற்றர் சுவாமியவர்கள் ஞானஒடுக்கப் போதகஞ்செய்கின்றார்.

### புதியகுடியேற்றதலம்

இரணைமடு-பரந்தன் புதிய குடியேற்றதலத்துக்கென்று கிளிநொச்சிப் பகுதியிலே ஆயிரம்ஏக்கர்நிலம் காடு வெட்டித்துப்புரவாக்கப்பட்டிருக்கிறது. அங்கு குடியேற விரும்புவாரைத் தெரிவுசெய்வதற்கென்று வடமாகாண ஏசன்றரான திரு. பி. ஜே. ஹட்சன் அவர்கள் சென்ற 15-ந்திகதியன்று ஓர்நிலக்கச்சேரி நடத்தினர்.

### பஸ்வண்டிவிபத்து

குதிரை றேஸிற்காகச் சென்றசனிக்கிழமை அம்பலாங்கொடை வாசிகளில் ஒருதொகையானோர் ஏறிச்சென்ற பஸ்வண்டி ஒன்று மவுண்லவீனியாவிலே ஓர் மின்சார கம்பத்துடன் மோதுண்டகாரணமாக இருவர் உயிர்துறக்க, எட்டுப்பேர் பலத்தகாயம் அடைந்தார்கள். இறந்தவர்களில் ஒருவர் பெரியஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்படும்வழியில் உயிர்துறந்தனர். பதினறு வயசுடைய பேள் பேர்னண்டோஎனும் இளம்பெண் விபத்து நிகழ்ந்த இடத்திலேயே உயிர்துறந்தனள். மவுண்லவீனியாவில் வசிக்கும் திரு. பி. வி. பெர்னண்டோ என்பவரின் மகளான இப்பெண் பாடசாலையிலிருந்து திரும்பிச் சென்றுகொண்டிருந்தாள். இவள் நடைபாதையில் நடந்துசெல்லும்போது, மின்சாரகம்பத்துடன்மோதிய பஸ்புரளவே, இவள் அதன்கீழ் அகப்பட்டு நெரிந்து உயிர் துறந்தாள்.

—இந்தியாவிலே சென்றஆனிமாதம் 30-ந்திகதி வரையில் காந்திஜி ஞாபகார்த்தநிதிக்கென்று சேகரிக்கப்பட்டுள்ள பணத்தொகை 8 கோடியே 64 லட்சத்து 48 ஆயிரத்து 662 ரூபாவாகும். சென்ற ஆனிமாசத்தில்மாத்திரம் 36 லட்சம் ரூபாவிற்குமேல் சேர்ந்திருக்கிறது.

## "சதிகாரர் யார்?"

— "தமிழ் முரசு" —

ஐயா! 9-8-49-இல் வெளியான "இந்துசாதன"த்திலே "சங்கிலியன் தமிழரசன்: ஆனல் சதிகாரர் யார்? தமிழ்த்துரோகிகளால் மக்கள் இழந்தபோக்கிஷம்" என்பனவாய்த் தலையிற்கொண்டு சுமக்கமுடியாத் தலையங்கங்களுடன் "தமிழரசு" என்னெருவர் வெளிகொண்டு, அன்னிய சமய சன்னதங்கொண்டு எழுதிவிட்டிருப்பவைகளைக் கவனிக்கும் அறிஞர்கள் எவர்தான் எள்ளி நகையாடாதிருப்பர்?

தமிழரசே! தாங்கள் சுட்டிக்காட்டும் அந்தத்தேசத்துரோகிகள் யார்? நாட்டைக் காட்டிக்கொடுத்த துரோகிகள் யார்? அற்பபணத்துக்கும், பட்டத்துக்கும் ஆசைப்பட்டு...சைவத்தை அடகுவைத்த அந்தச்சதிகாரர் யார்? அதிலும் "ஆராய்ச்சிக்குஎட்டாத ஆதியையுடைய அரும்பெரும்மதமான சைவத்தை" அத்துணை பெரும்நெஞ்சத்துணிவோடு—அஞ்சாத்துணிவோடு அடகுவைத்த சண்டாளர் யார்? "அந்நிய இரத்தக்கறைபடிந்த துரோக மதத்தைத்தழுவிய"தேசத்துரோகிகள் யார்? தம்போலிய சைவர்கள் அல்லவா! சைவத்தமிழர்கள் அல்லவா? மற்றப்படி தாம் போர்தொடுக்கும் அந்நியசமயத்தவர்கள் அல்லவே!

தமிழரசே! அம்மம்ம "ஆராய்ச்சிக்கும் எட்டாத ஆதியையுடைய அரும்பெரும் மதமான சைவத்தை அடகுவைத்து, அந்நிய இரத்தக்கறை படிந்த துரோகமதத்தைத் தழுவிய"வர்களைத் தாங்கள் எழுதியுள்ளபடி தேசத்துரோகிகள் என்பதா? அன்றேல் சைவத்துரோகிகள் என்பதா? இத்தகைய சைவத்துரோகிகளைத் தமிழ்த்துரோகிகள் என்பது தகுமா? ஆகவே, சைவத்துரோகிகளாற்றான் 'அன்றுதமிழரசுமறைந்தது—தமிழரசன் சங்கிலியன் வீழ்ச்சியுற்று இன்றுநாம் அடிமைகளாக இருப்பதற்கு வழிவகுத்தது" என்று நியாயம்முடிப்பது சரியாகுமல்லவா?

தமிழரசே! "அந்நியஇரத்தக்கறை படிந்த துரோகமதம்" என்று அறிந்துகொண்டும் அக்காலத்திலே சைவர்கள் அதைத் தழுவினர்களெனில்—சுதேச 'இரத்தக்கறை'படிந்த தங்கள்மதத்தை விட்டு நழுவினர்களெனில்—போர்த்துக்கேயரிடமும், ஒல்லாந்தரிடமும் கைகட்டிச் சேவகஞ்செய்து, அவர்களின் எச்சிற்சோற்றை இருகரங்களாலும் ஏந்தியுண்டு அற்பத்தனமாக அந்நியமதத்துக்கு அடிமைகளானர்களெனில்—தமிழ்மக்களாகிய எங்களை அடிமைக்குழியில் வீழ்த்தியவர் யார் என்பதுகரதலாமலகமன்றே! ஆமாம், தாங்கள்எழுதியுள்ளபடி, "மறைபொருளாகஒன்று இருந்தால்தான் அதனைப் பற்றி ஆராய்ச்சிவேண்டும்." "விழிப்பு உண்டானல் இருட்டில் நடந்தவை தோன்றத்தான் செய்யும்." ஆகவே, தமிழனுக்கும், தமிழ்நாட்டுக்கும் அளப்பரிய துரோகத்தை ஆற்றிய இச்சதிகாரர் யாரென்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டிய பெருமை இன்று யாருக்குரியது? தமிழரசுக்கே.

தமிழரசே! "சங்கிலியன் தமிழரசன்தான். ஆனல், அவன் அரசைக் குலைத்து, ஆட்சியைப்பறித்து, எங்களை அந்நியருக்கு அடிமைப்படுத்தினேர் யார்?—அந்தச்சதிகாரர் யார்?" என்பதை இனிச்சிந்திப்பீராக! இன்னும் "அந்நிய இரத்தக்கறைபடிந்ததுரோக மதம்"என்றும், "பிறிம்பான ஆட்டுமந்தை"யென்றும் இழிவாகவரைகிறதாங்கள் "அந்நியரையோ, அவர்கள் மதத்தையோ, நாம் குறைகூறுவதால் பயனில்லை" யென்று எழுதியிருக்கும் விநோதந்தான் என்னே! பயனில்லாமல் ஏனேகுறைகூற எழுந்தீர்கள்? தாங்கள் எழுதியவற்றால் ஒருபயனுமில்லை. ஆனல், பெரும்பழுத



— நாரந்தனை —


## அர்ச். பிலோமினம்மாள் திருநாள்

### 24-8-49

இத்திருநாள் நிகழும் மீ" 15-ந்திகதி நவதினஉற்சவங்களுடன் தொடங்கி 24-ந்திகதி புதன்கிழமை பூசையுடனும் சுற்றுப்பிரகாரத்துடனும் முடிவாகும். எங்கள் சுத்தவாளியின் பக்தர்கள் எல்லோரும் அழைக்கப்படுகிறர்கள்.

கட்டளைக்குரவர்.

## சின்னமடுத் திருநாள்



செகலோக பரலோக இராசேஸ்வரியாய்ச் சின்னமடுவில் திருப்பதி கொண்டுதிகழும் செபமாலைஇராக்கினியின் திருநாள் சென்ற ஆடிமதி 27-ந்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்ற நவதினஉற்சவங்களுடன் இம்மாதம் 5-ந்திகதி இனிதே கொண்டாடப்படலாயிற்று. கடைசியான திரிதினஉற்சவங்களிலும் ஆலயத்தின் உள்ளும்புறமும் அலங்காரமுற்றுவிளங்க, செபமாலை இராக்கினிக்குத் தோத்திரமாகச் செய்யப்பெற்ற பாவோசையுடன்கூடிய செபவோசை ஒலிபரப்பிமூலம் எங்கும்பரந்து மனேகரம்உண்டுபண்ணியது. மூன்று தினங்களிலும் வண. P. நீக்கிலாஸ் சுவாமியவர்களால் அரியபிரசங்கங்கள் செய்யப்பட்டன. பத்துக் குரவர் சமுகமளித்திருந்தார்கள். திருநாளுக்கு முதல்நாள் இரவு மாதாவின் பக்தர்கள் திருப்பதியில் தேங்கிநிற்க, எங்கும் தீபவர்த்திகள் பிரபைவீசிநிற்க, வண. மரியதாஸ், வண. F. பிரான்சீஸ்சுவாமிமார் துணைபுரிய, வண. P. நீக்கிலாஸ் சுவாமியவர்களால் கடைசிவேஸ்பர் பாடித் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பட்டது. திருநாளன்று காலை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஒன்றின்பின் ஒன்றய் நிறைவேறிய திவ்வியபூசைகளில் திருவிருந்தருந்தினர். 7 மணி வரையில் மண்டைதீவுக் கட்டளைக்குரவர் வண. L. யோசெவ் சுவாமியவர்கள் பாடற்பூசை நிறைவேற்றினர். ஈற்றில் சுற்றுப்பிரகாரம் நடந்துமுடிந்ததும் சின்னமடுக் கட்டளைக்குரவர் வண. A. லெல்போங்சுவாமியார் ஒலிபரப்பிமூலம் கூடியிருந்த யாத்திரிகளுக்கு அருட்சிக்குரிய புத்திமதிகள் கூறவே, திருநாள் முடிபெய்தியது.

—நிருபர்

தானென்று இப்போது எண்ணுவீர்கள்போலும்?

ஈற்றில் முரடனும், பழிபாவங்களுக்கு அஞ்சாதவனும், பிறவித்துட்டனும், தன்பிரசைகளுக்குச் சமய சுதந்திரம் கொடுக்க மறுத்தவனும், அங்ஙனம் மறுத்துத் தன் மகனையும், மன்னரிலே அறுநூற்றுக்குமேற்பட்ட மக்களையும்வாளுக்கிரையாக்கிப்பெரும் இரத்தப்பழியைத் தேடிக்கொண்ட படுபாதகனுமாகிய சங்கிலியன்தானே தனது வீழ்ச்சிக்கு மட்டுமன்றித் தமிழ்அரசின் வீழ்ச்சிக்கும் காரணமென்றல், "தமிழரசு" தான்பிடித்த முயலுக்குக் கால் மூன்றென்றுதான் சாதிப்பாரோ!

### பாடசாலை விடுமுறைகாலம்

உதவிப்பணம் பெறும் பாடசாலைகளின் விடுமுறைகளை ஏககாலங்களிலே அருளுவது பற்றிப் பிரதமாசிரியர்கள் மகாநாட்டின் அடுத்தகூட்டத்தில் ஆலோசிக்கப்படுகிறது. பிரதமாசிரியைகளின் ஐக்கியசங்கம் இது பற்றிச் சிலகாலத்தின்முன் ஆலோசனை செய்து, விடுமுறைகளை ஒன்றுபடுத்துமிடத்துப் பற்பலசமயஸ்தாபன பாடசாலைகளுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களையிட்டுச் சாதனையில் கொண்டுவரக்கூடியதிட்டம் ஒன்றை ஆக்கமுடியாமற்போய்விட்டது. பல்வேறு பாடசாலைகளாலும் பல்வேறு காலங்களில் விடுமுறைகள் அருளப்படுவதாலே பெற்றர் மிகவும் கஷ்டப்படுகிறர்களென்றும், உதவிப்பணம் பெறும் பாடசாலைகளின் கொள்கையில் வித்தியாபகுதி தலையிடமாட்டாதென்றும், பாடசாலைகளே இதுவிஷயமாய் ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டுமென்றும் ஐக்றிங் வித்தியாதலைவரான திரு. கே. எஸ். அருள்நந்தி அவர்கள் தெரிவித்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச். ஸ்நாபக யுவானியார் திருநாள்
### சுண்டிக்குளி



சுண்டிக்குளி பிரபுக்கள் குடியிருப்பிலே
கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும்
**அர்ச். ஸ்நாபக யுவானியார்**
**— திருநாள் —**

வழமைப்பிரகாரம் ஆவணி மாசம் **20**-ந் திகதி
கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி
**29**-ந் திகதி காலை பாடற்பூசையுடனும்
சாயந்தரம் சுற்றுப்பிரகாரத்துடனும்
விருந்தோடும் முடிவாகும்.

யாழ்ப்பாணம்,
17 - 8 - 49.

P. T. ஜேம்ஸ், O. M. I
கட்டளைக்குரு

---

### தீர்வையின் காட்சியைச்
### — சித்திரிக்கும் —
## பாவசங்கீர்த்தனம்

பாவப்பொறுத்தல் அடையவேண்டியது நமதுகடமை. மாசற்ற செம்மறிப்புருவையாகிய யேசுவுடன் நாம் ஒன்றிக்கவேண்டுமானுல் நமதுஇருதயமும், கரங்களும் அற்பமாசும் அணுகாமல் தூய்மையாக இருத்தல்வேண்டும். "ஆண்டவருடைய பருவதத்தின்(பீடத்தின்)மேல் ஏறுகிறவன் யார்? அவருடைய பரிசுத்தஸ்தலத்தில் வீற்றிருப்பவனுர்? கரங்களில் மாசற்றவனும், இருதயத்தில்பரிசுத்தமுள்ளவனு யிருப்பவனும்தான்" என்று 23-ம் சங்கீதம்கூறுகின்றது. நமது நல்லதாயாம்திருச்சபை நமது பாவஅந்தஸ்தை உணருமாறு நம்மை வற்புறுத்துகிறது. ஞானஸ்நானத்தால் பெற்றவரப்பிரசாதத்தைப் புதுப்பிக்கும் தீர்த்தம்தொட்டுச் சிலுவைபோடுதல், குருவானவர் தீர்த்தம்தெளித்தல் ஆகிய அருட்கருவிகளைத் தக்கவிதமாகப் பெற்றிருப்பின் நமதுஅற்பப் பாவங்கள் நம்மைவிட்டு அகன்றிருக்கும். ஆனுல், அவற்றைத் தக்கவிதமாய்ப்பெற்ருேமா என்பதுதான் சந்தேகம். ஆகையினுல்தான் எக்காரியத்தையும் தீர்மானித்துச்செய்யும் திருச்சபையும் பாவப்பொறுத்தலை அடைந்தோம்என்பதை நிச்சயப்படுத்தப் பூசையில் பாவசங்கீர்த்தனமந்திரத்தைச் சொல்லுமாறு தூண்டுகின்றது. குருவானவர் பீடத்தடியில்நின்று பாவசங்கீர்த்தனமந்திரம் சொல்லுவதும் இதற்காகத்தான். பாவசங்கீர்த்தனமந்திரம் தன்னிலேதானே ஓர்உத்தமமனஸ்தாபமுயற்சியாகும். அதனை ஓர் உயரிய நாடகநடிப்பென்றும் நவில்தல்தகும். இது அதன்பொருளிலும், நோக்கத்திலும் அப்போஸ்தலிக்க பாரம்பரையைத் தழுவியது. இப்போதுள்ளமாதிரியான மந்திரம் கி. பி. 14-ம்நூற்ருண்டிலிருந்தே வழக்கில் வந்திருக்கிறது.

பாவங்களுக்காக உத்தமமனஸ்தாபப்பட்டு அவற்றைச்சங்கீர்த்தனஞ்செய்வதின் அவசியத்தைத் திவ்வியபலி பூசை நமக்குக்கற்பிக்கின்றது. குருவானவர் பீடத்தின்அடியில் நின்றுகொண்டு தேவாராதனைமுறைப்படி வெளியாங்கபாவசங்கீர்த்தனம் செய்கிருர். தாழக்குனிந்து தமதுபாவங்களைப் பொறுக்குமாறு கடவுளைநோக்கி மன்ருடுகிருர். நாமும்அதேசெபத்தைத் திருப்பிச்சொல்கிறப்படியால் "உன்னதமும்உருக்கமுமான தெய்வீகநாடகமாம் தேவபலிபூசையில்" நாமும் நடிகர்களாய் இருக்கிறேம்என்பதை மறத்தல்கூடாது.

பாவசங்கீர்த்தனமந்திரம் தேவதீர்வையின் காட்சியை இரண்டுநடிப்புகளில் சித்திரிக்கின்றது. குருவானவர் பாவசங்கீர்த்தனமந்திரத்தைச் சொல்லும்போது தேவநீதிஸ்தலத்தின்முன் நிற்கிருர். நீதியாசனத்தில் சம்மனசுக்களும் அர்ச்சியசிஷ்டர்களும் புடைசூழக் கோணுநீதியுள்ளஆண்டவர் வீற்றிருக்கிருர். அருகில்தேவதாயும், மனுமக்களின்மத்தியஸ்தியும், பரலோகவாசிகளின் பரமஇராக்கினியுமான கன்னிமரியாய் இடம்வகிக்கின்ருள். அடுத்தாற்போல் அதிதூதரும், பேய்க்கணங்களைமுரியவடித்தவரும், மரணத்தருவாயில் நமதுஆன்மாவை ஆண்டவரின்நீதிமன்றத்துக்கு அழைத்தேகுபவருமான மிக்கேல்சம்மனசானவர் வெற்றிவேல்கையுடன் காத்துநிற்கின்ருர். அதோ பிறிதோர்இடத்தில் கிறீஸ்துநாதருக்குமுன்னேடியும்,வனாந்தரத்தின்குரலொலியும், ஆண்டவரின் வழியைச் செவ்வைப்படுத்தியவரும் யேசுநாதருக்குஞானஸ்நானம்கொடுத்தவருமான அர்ச். ஸ்நாபகஅருளப்பரும் காட்சியளிக்கின்ருர். திருச்சபையின்கல்லாகிய அர்ச். இராயப்பரும் அதனைக்கொத்திப் பண்படுத்திய கடப்பாறையாகிய அர்ச். சின்னப்பரும் காணப்படுகின்றனர். இவர்களையும், ஆனந்தசாகரத்தில் ஆழ்ந்திருக்கும் சகலஅர்ச்சியசிஷ்டவர்களின் கூட்டத்தையும் அம்மேடையின்கண்ணேகாண்கின்ருர் குருவானவர்.

மேலும் தேவாலயத்தில் குழுமிநிற்கும்விசுவாசிகளும் அவருடையபாவசங்கீர்த்தனத்தைச் செவிகொண்டு கேட்கின்றனர். உம்பர்லோகவாசிகட்கும், விசுவாசிகட்குமுன்பாகத் தமக்கு வரும் மானபங்கத்தையும் கருதாமல் மகாதாழ்ச்சியுடன் 'சிந்தையினுலேயும், வாக்கினுலேயும்,கிரியையினுலேயும்மகா பாவம்செய்தேனே' என்றுஒப்புக்கொள்கிருர். ஞானஸ்நானத்தினுல் அடைந்த அழகிய தூயஆடையை அழுக்குறச்செய்ததாக ஏற்றுக்கொள்கின்ருர். தமதுதப்பிதத்தை உணர்ந்து தத்தளிக்கின்ருர். ஆண்டவருக்குமுன்நிற்கத்தான் அபாத்திரவான்என்பதை உணர்கின்ருர். சிரந்தாழ்ந்து உடல்குனிந்து மார்பில் மும்முறை 'என்பாவமே, என் பாவமே, என்பெரும்பாவமே' என்று பிழைதட்டிக்கொள்கிருர். பாவத்தையறிந்தும்சுயஇச்சையால்வேணுமென்றேசெய்த அக்கிரமி தாம்என்று அங்கீகரிப்பதின் அறிகுறியாகவே மும்முறை பிழைதட்டிக்கொள்கிருர். இதுதான் பாவசங்கீர்த்தன மந்திரத்தின்உயர்ச்சியும், மேன்மையுமாகும். முதல்நடிப்பு முடிவடைகிறது.

இதுகாறும் கோபக்குறியோடு குருவானவரின் பாவசங்கீர்த்தனத்தைக் கேட்டுக்கொண்டிருந்த மோட்சவாசிகளின்மனம் இளகுகிறது. அவருக்காகத் தேவநீதிபதியின்முன் பரிந்துபேசுகின்றனர். இறைவனும் இரக்கங்காட்டுகின்ருர். பாவங்கள்பொறுக்கப்பட்டன என்றநம்பிக்கையால் குருவானவரும் தேறுதல்அடைகிருர். பாவசங்கீர்த் மந்திரத்திற்குப்பிறகு குருவானவரும் பரிசாரகனும் சொல்லும்செபங்கள் தெய்வகிருபையையும்,பாவமன்னிப்பையும், நித்தியசீவனையும் நாம்அடையும் நம்பிக்கையின் மன்ருட்டாக விளங்குகின்றன.

(தொடரும்)

---

## ஊர்காவற்றுறையா ?
### அன்றேல்
## காங்கேசன்துறையா ?

வடமாகாணத் துறைமுகங்களைப் பிரயாணிகளின் போக்குவரத்திற்காகத் திறந்துவிடவேண்டியதன் அவசியத்தைப் பலமாகவற்புறுத்திப் பலரும் எடுத்துக்காட்டிய நியாயங்களைஉணர்ந்து அத்துறைமுகங்களில் ஒன்றைத் திறந்துவிடப் போக்குவரத்துமந்திரியார் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் முன்வந்திருக்கிருர். "இதுசம்பந்தமாக ஆகவேண்டிய நடவடிக்கைகளை அவர் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இச்சபை அபிப்பிராயப்படுகிறது" எனச் சாவகச்சேரிப் பிரதிநிதி திரு.வி.குமாரசாமி அறிவித்தல்கொடுத்துள்ள பிரேரணை புரட்டாசிமாதம் 7-ந் திகதியன்று பாராளுமன்ற சனப்பிரதிநிதிகள்சபையில்பிரேரேபிக்கப்படவிருக்கிறது. அதற்குமுன் எந்தத்துறைமுகத்தைத் திறந்துவிடுவது என்பதுபற்றி இப்பொழுது போக்குவரத்துமந்திரியார் வடபகுதியைச்சேர்ந்த பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கு முதலாவதாகத் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும்படி கேட்டு ஓர் சுற்றுக்கடிதம் அனுப்பியிருக்கிருர்.

வடபகுதிப் பிரதிநிதிகளுக்குப் போக்குவரத்து மந்திரியாரின் நிரந்தரகாரியதரிசி அனுப்பியுள்ள சுற்றுக்கடிதத்தின் விபரம் வருமாறு:

(1) வடமாகாணத் துறைமுகங்களில் ஒன்றை வர்த்தகப் போக்குவரத்துக்கேற்ற துறைமுகமாக அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற கோரிக்கையைப் போககுவரத்துமந்திரி காரியாலயம் இப்பொழுது பரிசீலனை செய்து வருகிறது. அவ்விதம் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய துறைமுகமானது ஊர்காவற்றுறை அல்லது காங்கேசன்துறையாக இருக்கவேண்டுமென்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்படும். கீழேசுட்டிக் காட்டியுள்ளபடி இந்த இருதுறைமுகங்களும் சம்பந்தப்பட்டமட்டில் அனுகூலங்களும் இருக்கின்றன. பிரதிகூலங்களும் இருக்கின்றன. மேலும், இந்த இருதுறைமுகங்களுள் ஒன்றின் அபிவிருத்திவேலையை நடைமுறைக்குக்கொண்டுவரவேண்டுமானுல், அதைஆராய்ந்து திட்டம்வகுத்து நிர்மாணவேலை ஆரம்பிக்கக் கொஞ்சக்காலம் பிடிக்கும்.

(2) ஊர்காவற்றுறை இது நல்ல பாதுகாப்பான துறைமுகம். வருடமுழுதும் இது உபயோகப்படத் தகுந்தது. ஆனுல், இத்துறைமுக வாயிலில் ஒருதடைஇருக்கிறது. ஆறுஅடிஉயரத்துக்கு மேற்படாத அடிப்பாகமுள்ள கப்பல்கள்தான் இத்துறைமுகத்துள் நுழையமுடியும். இப்பொழுது இத்துறைமுகத்தை நோக்கிவரும் பெரிய கப்பல்கள் நான்குமைல் தூரத்திலேயே நங்கூரம்பாய்ச்சிநிற்கவேண்டியிருக்கிறது. அவ்விதம்நிற்கும் கப்பல்கள் இருபருவகாலங்களின் ஆவதிக்குட்படவேண்டியுமிருக்கிறது. ஊர்காவற்றுறையின் துறைமுகவாசல்பகுதி 1928–ம்வருடம்அளக்கப்பட்டது. இத்துறைமுகத்தில் பெரியகப்பல்கள் வந்து தங்குவதற்கேற்றவசதிகள் செய்யப்படவேண்டுமானுல் துறைமுகவாசல்பகுதியிலுள்ள பெரும்பாறைகளை அப்புறப்படுத்தி ஆழப்படுத்தப் பெருஞ்செலவு ஏற்படுமென்று அப்பொழுது தெரிவிக்கப்பட்டது. இத்துறைமுகத்தை இணைக்கும் நல்லவீதி இருக்கிறது. ஆனுல்இத்துறைமுகத்தை இணைக்கும் றெயில்பாதை இல்லாதது ஓர்பெரிய பிரதிகூலமாகும்.

(3) காங்கேசன்துறை இத்துறைமுகத்தில் கரையிலிருந்து அரைமைல்தூரத்தில் எல்லாக்கப்பல்களும் வந்து வசதியாக நங்கூரம்பாய்ச்சிநிற்க முடியும். ஆனுல் இத்துறைமுகத்தை வருடத்தில் ஆறுமாதகாலம்மட்டுமே உபயோகப்படுத்த முடியும். அதாவது தென்மேற்குப் பருவகாலத்தில் மட்டுமே உபயோகப்படுத்தமுடியும். இத்துறைமுகத்தை வருடமுழுவதிலும் உபயோகப்படுத்துவதற்கு வசதிசெய்யவேண்டுமானுல், வடகிழக்குப் பருவகாலத்தில் கப்பல்கள்வந்து நங்கூரம்பாய்ச்சிநிற்க வசதிகள்ஏற்படுத்துவதற்கும், மற்றும்பாதுகாப்புகள் ஏற்படுத்துவதற்கும் பெருந்தொகைப்பணம் செலவிடவேண்டியிருக்கிறது. இத்துறைமுகத்தைஇணைக்கும் நல்லவீதிஇருப்பதுடன் இதைஇணைக்கும் றெயில்பாதையும்இருக்கிறது. இத்துறைமுகத்திற்குப்பக்கத்தில் சிமெந்துத்தொழிற்சாலை இருக்கிறதென்பதும் இங்கு குறிப்பிடத்தகுந்தது. ஆதலால் இத்தொழிற்சாலையில் உற்பத்திசெய்யப்படும் சிமெந்தைக் கடல்மார்க்கமாக நாட்டின்பலபாகங்களுக்குக் கொண்டு செல்ல முடியும். வெளிநாடுகளுக்கும் அதை ஏற்றுமதிசெய்யவும் வசதியேற்படுமென்பதை இங்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

(4) வடமாகாணத்திலுள்ள தொகுதிகள்ஒன்றின் பாராளுமன்ற பிரதிநிதி என்றமட்டிலே இவ்விஷயத்தில் தமது அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. போக்குவரத்துமந்திரி காரியாலயத்தில் முன்காட்டிய இருதுறைமுகங்களில் ஒன்றைப் பிரயாணிகளின் போக்குவரத்துக்குத் திறந்துவிட நிச்சயித்திருப்பதாகத் தெரியவருகிறது.

---

## மரணசங்கதி

திரு. ஜே. ஏ. லேன்அவர்களைப் பலரும் நன்கறிவார்கள். இவர் பெரியதாழைஎன்ற புண்யபூமியில் பிறந்தஉத்தமபுதல்வன். கார்மணல்துறை என்ற பகுதியில் இவரைஅறியாதவர்கள் யார். வெகுகாலமாக இவர் "பரதன்"என்ற பத்திரிகையின் ஆசிரியராகவிருந்து அதனை நடாத்திவந்தார். எழுத்திலும் பேச்சிலும் இவரைப்போன்றகெட்டிக்காரர் தூத்துக்குடிமேற்றிராசனத்தில், கார்மணல்துறையில் மிகஅருமையென்றே சொல்லவேண்டும். இலங்கையிலே நுவரெலியில் இவர் பிரக்யாதிபெற்றவர். நுவரெலி டிஸ்திறிக்கோட்டில் (District Court Sworn Translator) என்றபதவியை வெகுகாலமாக மேற்கொண்டவர். இவர் இம்மாசம் 5-ந் திகதி காலை தமது பிறப்பிடமாகிய பெரியதாழையில் காலஞ்சென்ற துக்ககரமானசெய்தியைக் கேள்விப்பட்டு வருந்தலானேம். அன்னரின் ஆத்துமம் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவுள் கிருபை செய்வாராக.

R. I. P.

—நிருபர்

---

—அமெரிக்காவிலே கீர்த்திவாய்ந்த ஓர் சிற்பியாகிய வண. தோமஸ் மைக்ளின் சுவாமியார் போர்த்துக்கால்தேசபத்திமாவின் பஸிலிக்கா எனும் மகா ஆலயத்துக்கு அமெரிக்க கத்தோலிக்கரின் பேரால் கொடுக்குமாறு பத்திமாநாயகியின் பாரிய சுரூபமொன்றைச் செய்யவிருக்கின்ருர். இச்சுரூபமானது அவ்வாலய பிரதமவாயிலுக்கு மேலாய் நிலத்திலிருந்து 50 அடிஉயரத்திலுள்ள 18 அடி உயரமான ஓர் மாடத்தில் ஸ்தாபிக்கப்படும்.

—உணவுப்பொருட்களைக் கண்டபடியெல்லாம் வீணுகச் செலவழிப்பதைத் தடுக்கும் நோக்கமாய் இந்திய மத்தியமாகாண அரசாங்கம் அம்மாகாணத்திலுள்ள எவரும் தனது வீட்டில் சுபகருமமோ, அசுபகருமமோ நடைபெறுகையில் 25 பேருக்கு மேல் விருந்தளிக்கப்படாதென்று ஓர் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேத வினவிடை

— III —

பிதாவானவர்
எங்கள் கதிநியமிப்பவர்

## (2) அழியாத ஆத்துமம்

36. நமது சரீரம் மாணித்தபின் நமதுஆத்துமம் அழிந்து போகாதோ ?

இல்லை. நமது ஆத்துமம் ஒருபோதும் அழியாது. அதற்கு முடிவில்லாத வேறொரு சீவியம் உண்டு.

"நமக்கு இங்கே நிலைபெற்ற பட்டணமில்லை. இனி வரும் பட்டணத்தையே நாடிப்போகிறோம்" —எபி. XIII. 14.

37. என்ன நியாயத்துக்காக ஆத்துமத்துக்கு முடிவில்லாத வேறொரு சீவியமுண்டு என்கிறோம் ?

நியாயம் ஏதெனில் அது பகுதிகளாகப் பிரிக்கக்கூடாத ஒரு அரூபியும், கோணாத நீதியை எதிர்பார்க்கிற மனச்சாட்சியையுடையதும், பூரணதிருப்தியைத் தேடுகிற கட்டாயமான வாஞ்சையுள்ளதுமா யிருப்பதேயாம்.

38. நமது ஆத்துமம் ஒரு அரூபிதானா ?

ஆம். ஏனெனில் அது சடத்தில் தங்காத எண்ணங்களையும் ஆசைகளையும் பிறப்பிக்கிறபடியால், அதுவும் சடத்தில் தங்காத ஒரு அரூபியாய் இருக்கவேண்டும்.

39. அரூபியான ஆத்துமத்துக்கு ஏன் முடிவில்லாத வேறொரு சீவியம் இருக்கவேணும் என்கிறோம் ?

ஏனெனில் ஒரு பொருளுக்குப் பிரிக்கக்கூடிய பங்குகள் இருந்தால்தான், அது பிரிந்து அழியும். அரூபியான ஆத்துமத்துக்கு அப்படிப்பட்ட பங்குகள் இல்லாதபடியால், அது முடிவில்லாமல் சீவிக்கும்.

"ஆத்துமத்தைக் கொல்லமுடியாதவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்"—மத். X. 28.

"பிச்சைக்காரன் மரித்து, தேவதூதர்களால் அபிரகாம் மடியில் கொண்டுபோய் வைக்கப்பட்டான். ஐசுவரியவானும் மரித்து, நரகத்தில் புதைக்கப்பட்டான்" —லூக். XVI. 22.

40. நமது மனச்சாட்சி கோணாத நீதியை எதிர்பார்க்கிறதுதானா ?

ஆம். ஏனெனில் அது நாம் நன்மையைச் செய்யவும் தின்மையை விலக்கவும் வேண்டும் என்பதற்கும், நன்மை செய்தால் பாக்கியத்தையும் தின்மை செய்தால் நிர்ப்பந்தத்தையும் நமக்குச் சருவேசுரன் தருவார் என்பதற்கும் சாட்சியாயிருக்கிறது.

41. கோணாத நீதியை எதிர்பார்க்கிற மனச்சாட்சியையுடைய நமக்கு ஏன் வேறொரு சீவியம் இருக்கவேண்டும் ?

ஏனெனில் இவ்வுலகில் நல்லவர்கள் உபத்திரவப்படுவதையும், கெட்டவர்கள் சித்தியடைவதையும் நாம் பல முறைகளில் காண்கிறோம். ஆகையால் சருவேசுரன் எங்கள் ஒவ்வொருவருக்கும் நீதியின்படி சம்பாவனை கொடுக்கிறதற்காக நமக்கு வேறொரு சீவியம் இருக்கவேண்டும்.

"பூமியின்மேல் புண்ணியவான் தான் அக்கிரமஞ் செய்ததுபோல், அக்கிரமிக்கு வரும் வாதையை அனுபவிக்கிறது. துன்மார்க்கனே தான் புண்ணியஞ் செய்தது போல், நீதிமானுக்கு இருக்கும் அமரிக்கையை அனுபவிக்கிறது" —சங்கப். VIII. 14.

"கடைசியாய் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. இதை நீதியுள்ள நடுவராகிய கர்த்தர் அந்த மகாநாளில் எனக்குக் கொடுப்பார்"—2. தீமோ. IV. 8.

42. குற்றமில்லாதவர்கள் நீதிக்கெதிரா்க உபத்திரவப்படுவதின் நியாயத்தை விளங்கப்படுத்துகிறதற்காக, அவர்கள் முந்தின பிறப்பில் குற்றஞ் செய்தார்கள் என நாம் சொல்லலாமோ ?

இல்லை. ஏனெனில் குற்றமில்லாதவர்களின் மனச்சாட்சி தங்களுடைய முந்தின பிறப்பையோ அப்பிறப்பில் செய்த குற்றத்தையோ ஒத்துக்கொள்ளாதபடியால், அவர்களைப்பற்றி அப்படிச் சொல்லுகிறது பெரிய ஒரு நீதியீனம்.

"இவன் குருடனாகப் பிறந்தது இவன் செய்த பாவமும் அல்ல. இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமும் அல்ல"—அரு. IX. 2-3.

43. நாம் கட்டாயமான வாஞ்சையினால் பூரணதிருப்தியைத் தேடுகிறோமா ?

ஆம். ஏனெனில் நமது சீவியக் கிரியைகள் ஒவ்வொன்றிலும் நமக்குக் கடைசியாக மனரம்மியத்தைக் கொடுக்கக்கூடிய நன்மையையே தேடிவருகிறோம்.

44. கட்டாயமான வாஞ்சை என்றால் என்ன ?

சுயாதீனத்திற் தங்காததும் ஒருபோதும் தப்பாமல் நேரிடுகிறதுமான சுபாவ வாஞ்சையே கட்டாயமான வாஞ்சையாம்.

45. இந்த வாஞ்சையை வெறுத்துவிட்டால்த்தான் நமக்கு மனரம்மியம் வருமென்பது சரியோ ?

இல்லை. ஏனெனில் கட்டாயமான சுபாவ வாஞ்சையை ஒருவராலும் வெறுக்கவும் முடியாது. வெறுத்தாலும் அதனால் நமக்கு மனரம்மியம் வரப்போவதுமில்லை.

46. மனிதன் தனக்குப் பூரணதிருப்தியைக் கொடுக்கக்கூடிய நன்மையைத் தெரியும்பொழுது, தனது சுயாதீனத்தைப் பாவிக்கிறானா ?

ஆம். சிலவேளை தற்கொலையைத் தானும் தனக்குத் திருப்தியைக்கொடுக்கக்கூடிய நன்மையென்று தப்பிதமாய் தெரிந்துகொள்ளுகிறான்.

47. நாம் இவ்வுலகில் பூரணதிருப்தியைக் கொடுக்கக்கூடிய நன்மையை அடையலாமோ ?

இல்லை. இவ்வுலகில் நன்மைகளை ஒரு குறைவுமில்லாமல் அடைந்து கொள்வது அருமை. அடைந்தாலும், அவைகளை ஒருகாலம் இழந்துபோக வேண்டிவரும். இழக்காவிட்டாலும், அவைகள் சீக்கரத்தில் கசப்பானதாய் மாறி நமது ஆத்துமத்துக்குப் பூரண திருப்தியைக் கொடுக்காது.

"வியர்த்தத்திலும் வியர்த்தம், சமஸ்தமுமே வியர்த்தம்...காண்கிறதினால் கண்ணுக்கு அபத்தத்தையும், கேட்கிறதினால் செவிக்குத் திருப்தியுமாகிறதில்லை"— சங்கப். I. 2, 8.

48. பூரண திருப்தியைத் தேடுகிற கட்டாயமான சுபாவ வாஞ்சையுள்ள நமக்கு ஏன் வேறொரு சீவியம் இருக்கவேண்டும் ?

ஏனெனில் கட்டாயமான சுபாவ வாஞ்சையினால் தேடுகிற நன்மையை நாம் இச்சீவியத்தில் அடைய இயலாவிட்டால், மறுசீவியத்தில் என்கிலும் அடையவேண்டும். அல்லாவிட்டால் பிதாவானவர் நமக்கு வீணான கதியை நியமித்தார் என்று சொல்லவேண்டி வரும்.

49 பூரணதிருப்தியைக் கொடுக்கக்கூடிய நன்மை எது ?

சருவேசுரன் மாத்திரமே அப்படிப்பட்ட நன்மையாம். ஏனெனில் அவர் மாத்திரமே ஒருகுறை இல்லாதவரும், எல்லா நன்மைகளைக் கொண்டிருப்பவரும், ஒருபோதும் ஒழிந்துபோகாதவருமாய் இருக்கிறார்.

50. நாம் மறுஉலகில் சருவேசுரனை அடைந்துகொள்வதற்கு இவ்வுலகில் என்ன செய்யவேண்டும் ?

நாம் சாவான பாவத்தை விலக்கி மரணமட்டும் நிலைப்பிரசாதத்தோடு இருக்கவேண்டும்.

51. நாம் சாவான பாவத்தில் விழுந்துவிட்டால் என்ன செய்யவேண்டும் ?

நாம் அதை வெறுத்துத் தள்ளி உத்தம மனஸ்தாபப்பட வேண்டும். விசேஷமாய் நாம் சாவான பாவத்தோடு நித்திரை செய்யப் போகப்படாது.

52. நாம் சரீரத்தையோ ஆத்துமத்தையோ கூடக் கவனிக்கவேண்டும் ?

ஆத்துமத்தை. ஏனெனில் நமது ஒரே ஒரு ஆத்துமத்தை நமது ஒரே ஒரு மரணமட்டும் நிலைப்பிரசாதத்தோடு காப்பாற்றுவதில் நமது நல்லகதி தங்கியிருக்கிறது.

"மனிதன் உலகமெல்லாம் ஆதாயமாக்கிக் கொண்டாலும், தன் ஆத்துமம் சேதப்பட்டால் அவனுக்குப் பிரயோசனமென்ன ?— மத். XVI. 26.

# முல்லைத்தீவில் புதிய கைத்தொழில்

முல்லைத்தீவிலே கோவில்குடியிருப்பு வாலிபர்களால் கயிறுதிரித்தல், தச்சுவேலைசெய்தல்முதலிய தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. சென்ற 5-ந்திகதிசனிவாரம் இவ்வூர்ப் பிரதிநிதி திரு. சி. சுந்தரலிங்கம்அவர்கள் இங்குசமுகமளித்துப் பிற்பகல் 5 மணியளவில் முன்சொன்னதொழிற்சாலைகளைத் திறந்துவைத்தார். அத்தருணம் வண. கட்டளைக்குரவர் தலைமையில் ஓர்கூட்டம் நிகழ்ந்தது. அதில் திரு.க.அருளப்புஆசிரியர் கைத்தொழிலானது முல்லைத்தீவில் ஓர்முன்னேற்றத்தைக் கொண்டுவருமென்றும், அதற்கு அரசினர் உதவிபுரியவேண்டுமென்றும் பேசினர். பின்னர் திரு. ஆ. பேதுருப்பிள்ளை அவர்கள் எமது ஊரில் இதுவரைஇல்லாத ஓர்கைத்தொழிற்சாலை உண்டாகியிருப்பதினால் அதற்கு எல்லாஊரவர்களும்சேர்ந்து உழைக்கவேண்டுமெனச் சபையோரை வேண்டிக்கொண்டார். அதன்மேல் பிரதிநிதியவர்கள்எழுந்துதாம்இப்பெருமுயற்சிக்குத் தம்மால்இயன்ற உதவி செய்வதாக உறுதிகூறினர். கடைசியில் தலைவரவர்கள் சமுகந்தந்தவர்களுக்கெலலாம் நன்றிகூறியதும் கூட்டம் இனிது முடிவெய்தியது.

P. M. வாஸன்

# பெற்றோர்தினவிழா

## கோப்பாய் தெற்கு

3-8-49 புதவாரம் கதிரவன் குடதிசைஏகும்நேரம். பெற்றோர்யாவரும் வந்துகூடுகிறார்கள். பாடசாலை தோரணங்களால் சிங்காரிக்கப்பட்டுத் தீபாலங்காரமுற்று விளங்கியது. சுற்றுடலும், பாடசாலையும் பிரமுகர்களாலும், இவ்வூர்வாசிகளாலும் தேங்கின. அத்தருணம் இப்பகுதி வித்தியாதரிசினி ஸ்ரீமதி A. சரவணமுத்துஅவர்களுக்கு ஆசிரியை செசிலியாசின்னப்பு பூமாலை சூட்டியதும் அவர்தலைமையில் விழாத் தொடங்கியது. நவீனமுறையான நடினங்களின்நடுவே தலைமை ஆசிரியர் திரு. குணம் A.வஸ்தியாம்பிள்ளை அவர்களால் "பாடசாலையும் பெற்றோரும்" என்றவிஷயம் பயன்படக்கூடியமுறையில் பேசப்பட்டது. பின்னர் இப்பிரிவு D. R. O. முருகேசபிள்ளை அவர்கள் பெற்றோர்-ஆசிரியர்ஒத்துழைப்பு-பாடசாலைமுன்னேற்றத்துக்கு அவசியம் என்பதுபற்றியும், உரும்பராய் ரோ.கத். பாடசாலைத்தலைமைஆசிரியர் திரு. S. K. இராசேந்திரம்அவர்கள் அந்தக்கால இந்தக்காலக் கல்விமுறைகளைப் பற்றியும், இவ்வூர்வாசி திரு. தா.கவிரிகேற்பிள்ளை என்பவர் எங்கள்பிள்ளைகள் இனிமேலாவது "கல்வியில்முன்னேற்றமடையவேண்டும்" என்பதுபற்றியும், நீர்வேலி இந்துக்கல்லூரி மனேஜர் திரு. அத்தியார்அவர்கள் எவரும் இலவசக்கல்விகற்கும் இக்காலத்தை அவம் போக்காது கற்கவேண்டும்என்பதுபற்றியும், இப்பகுதிச் சுகாதார பரிசோதகர்அவர்கள் பாடசாலை முன்னேற்றத்திற்கான சிலநன்மதிகள்பற்றியும் பேசினார்கள்.

ஈற்றில் வித்தியாதரிசினிஎழுந்து தம்மை இவ்விழாவிற்குஅழைத்த தலைமை ஆசிரியர்க்கு நன்றிகூறித் தாமகாத்திராதவகையில் நான்குமணிநேரமாக நடந்தேறிய சிறுரின் ஆடல்பாடல் சிறப்பை வாயாரவாழ்த்தியும், இப்பாடசாலைஆசிரியர் இருவாதும் ஊக்கத்தை வியந்தும், பெற்றோர்க்குப் பலநன்மதிகள்கூறியும் முடித்தார். ஈற்றில்தலைமை ஆசிரியர் விழாவைச்சிறப்பித்த அனைவோர்க்கும் நன்றிகூறியதுடன் விழா இனிதேமுற்றிற்று.

N. தம்பிமுத்து

# ஆசிரியர்களின் கூட்டம்

கத்தோலிக்கபாடசாலைகளின் பிரதமமுகாமைக்காரரான அதிவண. ஜீ. ஏ. குருசாமி சுவாமியவர்கள் தலைமையில் இம்மாசம் 6-ந்திகதி காலை 10மணியளவில் மன்னார் நல்லாயன்ஆண்பாடசாலையில் மன்னார்ப்பகுதிக் கத்தோலிக்க தமிழாசிரியர்களின் கூட்டம் ஒன்று விமரிசையாக நடைபெற்றது. இதன்பிரதமநோக்கம்நமது துணைஆயரான மகாவந்.ஜே.எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர்அவர்களுக்கு மன்னார்ப்பட்டினத்தில் ஓர்வரவேற்புபசாரம்நடத்திவைப்பதேயாகும். இதனைச்சிறப்பாக நடத்திவைப்பதற்கென்று பின்வருவோர் நிர்வாகசபைக்குத் தெரியப்பட்டுள்ளனர். தலைவர் திரு. பர்ணபாஸ் ஆசிரியர், உபதலைவர் திரு. டானியல் ரோச்ஆசிரியர், காரியதரிசிதிரு.வி.ஆர். டோமினிக்ஆசிரியர், தனாதிகாரி திரு. அலோஷியஸ்பல்டானோஆசிரியர்; நிர்வாகசபையினர்: ஆசிரியர்கள் திரு. P. சந்தியாக்குரூஸ், திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை, திரு. நீ. சந்தியாகோ, திரு.எம்.சவிரிமுத்து, திரு.F. சூசையப்புக்குரூஸ், திரு.எம்.செபஸ்தியாம்பிள்ளை, திரு.லோறன்ஸ் என்பவர்களே

—நிருபா

Tamil 419

# தபால் பில்லைகள்

முக்கியமான நிகழ்ச்சிகளையும் உண்மைகளையும், உயர்ந்த மனிதர்களின் செய்கைகளையும் கொண்டாடுவது எல்லா நாட்டிலும்வழக்கமாக இருந்து வருகிறது. இச்செயல்களினால் தபால் இலாகாவிற்கு அதிகவருமானமும் வருகிறது. எல்லா நாடுகளிலும் ஸ்டாம்புகளைச் சேகரிப்போர் புதிதாக வெளிப்பட்டுள்ள ஸ்டாம்புகளை வாங்கும் பழக்கம் இருந்து வருவதால்தான் தபால் காரியாலயங்களுக்குப் பணம்அதிகமாக வந்து சேருகிறது.

பிரசாரத்திற்குத் தபால் பில்லைகள் எவ்வளவு உபயோகமாக இருக்கிறதென்பது எல்லாநாடுகளுக்கும் தெரியும். தொற்று வியாதிகளுடன் போராடுகையிலும் இந்த ஸ்டாம்புகள் பிரசாரத்திற்கு உபயோகப் படுத்தப்படுகின்றன. மலேரியாவை எதிர்த்து மெக்ஸிகோவில் ஸ்டாம்புகள் வெளியிடப்பட்டன. இந்த நாட்டில் மலேரியா அதிகமாக உள்ளது. ஆண்டிமலேரியா கமிட்டியின் பிரிஸ் கிருப்ஷன்கள் எல்லாம் நாள் ஒன்றிற்கு 400 மிலிகிராம் வீதம் தடையாகவும் 1-1·3 கிராம்கள் கொய்னா மருந்தாகவும் 5-7 நாட்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்த ஸ்டாப்பில் ஒரு மிகப்பெரிய கொசு ஒரு மனிதனின் நெஞ்சைப்பிடித்து அழுத்துவது போல் காணப்படும்.

# நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தால் என்வியாதி சுகமடைந்தது. நேர்த்தியின் மூலமாக இதைப் பிரசுரிக்கிறேன். பிரசுர தாமதத்துக்கு மன்னிப்புக்கோருகிறேன்.

சே. மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளிக் குருசுச் செபமாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மகளே! நீதானே நேர்ஸ்பிலோமினுளன்ற அந்தப்பெண்மணி" என்று மெதுவாகக்கேட்டாள்.

"ஆம், நான்தான் அம்மா! ஆனல், நான் இப்போது ஓர் நேர்ஸ்அல்ல; அந்தப்பதவி எனக்குத்தகுதியல்லஎனக் கண்டுணர்ந்து அதைவிட்டுவிட்டேன்; அப்படியானல்....ஆஸ்பத்திரியில் அன்று காயம்கட்டப்பட்டுக் கிடந்த அந்தவாலிபரின் தாயார் ஒருவேளை நீங்கள் தானேஅம்மா"

"ஆம் நான்தான்; அப்போ எனதுசெல்வமகன் பீற்றருடன் அபாயகரமான அந்தவேளை சம்பாஷித்தவள்—இந்தச் செபமாலையைஅவர்கையில் கொடுத்தவள் நீதானே" என்று தனது குரல்கம்ம ஆத்திரத்துடன் வினவியபோது, அச்சீமாட்டி மிகுந்தமனவெழுச்சியுடையவளாய்க் காணப்பட்டாள். அவள கண்ணிரண்டும் வெகுவாகக் கலங்கிக் கண்ணீரால்நிறைந்து போயின.

"அவர்இருந்த அந்த 'வாட்'டிலுள்ளவர்கள்எல்லாம் அவர் மிகமோசமானநிலைமையிலிருப்பதாகச் சொல்லக்கேட்டேன்; நானே மனஞ்சலிக்காத ஒரு பெண்; அதனல்நான்அப்போது செய்ததை செய்யத்தான் வேண்டுமெனத் தீர்மானித்து அவர்கட்டிலின்பக்கமாக விரைந்துசென்றேன்; அறிவுநினைவற்று அவர் கிடப்பதாகடக்றர்தெரிவி[illegible]தார்; ஆனல், அவர்அப்படிக் கிடக்கவில்லை; நான்சொல்வது உமக்குக்கேட்குமானல், உமதுதலையை அசைத்துக்காட்டுமென்று நான்கேட்டபோது, அவரும் தலையைஅசைத்துக் காட்டினர்; அவர்கரமும் செபமாலைக்குருசைப்பொத்திப்பிடித்துக்கொண்டது...."

இவ்விதம் நேர்ஸ்பிலோமின கூறியதும் அந்தச்சீமாட்டி அன்புபெருக, உள்ளமுருக அவள்கரத்தைப்பற்றிப்பிடித்து "உன்னைப்பற்றி நினைக்கவே பெரியஆச்சரியமாய் இருக்கிறது; நீசெய்தது மெத்தச்சரி; எனது மகன்ஓர்கத்தோலிக்கன்; ஆனல் எனக்குப் பெருங்கவலைஉண்டாகும்படியாகச் சிலவருடங்களின் முன் அவன் வேதத்தைக்கை நெகிழ்ந்துவிட்டான்; ஆயினும் அந்தவிபத்துக்குப்பின் அவன் மனந்திரும்பிவிட்டான். அந்த வேளை அங்கு எதிர்பாராதவிதமாகச்சென்று அவனை மனந்திருப்பிய அந்தச்சம்மனசு நீதான் மகளே; அதோபார், நடந்துவருகின்ருன்; அவன்தான்...."

(தொடரும்)

## நுவரெலி நகரசங்கம்

நுவரெலி நகரசங்கத்தின் நான்காவது வட்டாரப்பிரதிநிதியாக அங்கரிலுள்ள தமதிரீத்துவகல்லூரித்தலைவரின் பாரியாரான ஸ்ரீமதி. வி. ஏ. விஜயரட்ணசிங்கம் எனும்மாது போட்டியின்றித் தெரியப்பெற்றிருக்கின்ருர். இவர் பி. எஸ்சி பட்டம்பெற்ற ஓர்ஆசிரியை. இலங்கையிலே நகரசங்கம் ஒன்றுக்குப் பிரதிநிதியாகத் தெரியப்பெற்ற இரண்டாவது மாது இவரே. முதலாவது பிரதிநிதியாகக் கொழும்புநகரசங்கத்தில் அங்கத்துவம் வகித்தவர் ஸ்ரீமதி. மேரி இரட்ணம் அவர்களே.

## மதித்தற்கரிய கொடையின் நஷ்டம்

### கண்பார்வை குன்றுவதே

வயது போகப்போக, அதாவது ஏறக்குறைய 40 வயசில், அல்லது சிலவேளை அதற்குமுன் தானும் சாமானிய கண்கள் பார்வையில் குன்றும் அறிகுறிகள் காணப்படுகின்றன.

இதுவரை அதிகம் நெகிழ்ந்து உறளத்தக்கனவாயிருந்த கண்ணின் ஒளிவட்டங்கள் இப்போது க்டினமும், விறைத்தனவும் ஆகின்றன. இது முற்றும் இயறகையான மாற்றமே. இதிலே விளைவதென்ன? கண்ணின் தசைநார்கள் ஒளிவட்டங்களிலே சரியாகக் கருமம் ஆற்றத் தவறுகின்றன. அப்போது இந்த ஒளிவட்டங்கள் பல்வேறு தூரங்களுக்குப் பார்வையைச் செலுத்த இடங்கொடுக்க முடியாதனவாகும். அதனல் கண்களிலிருந்து அதிக தூரத்திலுள்ளவைகளைப் பார்க்கவேண்டுமென்ற ஓர்சார்பும், அதிகம் பிரபையான வெளிச்சம் வேண்டுமென்ற விருப்பும் உண்டாகின்றன. எழுத்துகள் களங்கமுற்று ஒன்று மற்றென்றினுள் சொருகுகின்றன். பகலில் விசேஷமாய்ச் செயற்கை வெளிச்சத்தில் வாசித்தபின் கண்கள் களைகொள்ளுகின்றன. பின்னர் தலையிடி உண்டாகிறது. அநேகமுறைகளில் பார்வைத் தூம்ரமுற்றும்நன்ருயிருக்கிறது. ஆனல் சமீபவேலைக்கு உதவாதிருக்கிறது.

கண்பார்வையைப் பரிசோதிப்பதிலும், தகுதியான மூக்குக் கண்ணுடிகளைத் தெரிவுசெய்து கொள்வதிலும் நமக்குள்ள அனுபவத்தை உமக்கு முற்ருகக் கையளிக்கிருேம். இக்காலமாதிரியான புத்தப்புதிய கருவிகளெல்லாம் இதுவிஷயமாய் நம்மிடம் கிடைக்கக் கூடியனவாய் இருக்கின்றன.

நல்ல கண்பார்வையுடையவர்கள் மூக்குக்கண்ணுடிகள் போடவேண்டியதில்லை. ஆனல் இவர்களின் நட்பும், ஆதரவும் ஒரு மூக்குக்கண்ணுடியை விற்பதிலும் எவ்வளவோ கூடிய மதிப்புள்ளன. உமது கண்களில் பழுது காணும்போதுதான் நமது வியாபாரதலத்துக்கு வரும்படி அழைக்கிருேம்.

பத்திருனுஸ், பல் - கண் வேலைகள்
28, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணம் கிருஷிகபாடசாலை 'கமக்காரப் பிள்ளைகளின் ஒருவருடப் பயிற்சி

மேற்கூறியபயிற்சி பெறவிரும்பும் மாணவர்கள் தங்களுடைய விண்ணப்பப் பத்திரங்களை 1949-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 30-ந்திகதிக்கு முன்பாக யாழ்ப்பாணம் கிருஷிகபாடசாலை அதிபருக்கு அனுப்பவேண்டும். மேற்படி விண்ணப்பம் செய்வோர் 17 வயதிற்கு மேற்பட்டவர்களாயும் 22 வயதிற்குட்பட்டவர்களாயும், வடமாகாணத்தவராயும், தமிழில் எழுத வாசிக்கத் தெரிந்தவராயும் இருத்தல்வேண்டும்.

விண்ணப்பப்பத்திரத்தையும் வேறு உங்களுக்குத் தேவையான விஷயங்களையும் மேற்படி பாடசாலை அதிபரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

R. D. கதிர்காமர்
அதிபர்
யாழ்ப்பாணம். கிருஷிகபாடசாலை

## உமது உணவை மென்று அருந்துக

உமதுபற்கள் உமக்குஅழகையும், வசீகரத்தையும் மாத்திரம் தருவன அல்ல. ஆனல், உமது உணவை நன்ருய்மென்றுஅருந்தவும் உதவுகின்றன. இது நீர் உண்பதை நன்கு சீரணிக்கச் செய்வதில் இன்றிமையாத ஓர் காரியமாகும்.

தூரதிஷ்டவதமாய் உமது இயற்கைப் பற்களை நீர் இழந்து போய் விட்டீரானல், இனி நீர் செய்யக்கூடிய சிறந்த காரியம், செயற்கைப் பல்கட்டும் ஓர்பல் வைத்தியரை நாடிப்போக வேண்டியதுதான்.

நல்லஉறுதியும், நன்ருகநின்று பிடிக்கக் கூடியதுமாய்ச் செயற்கைப்பற்களுக்கு இணையானபிரபையுள்ள அதிகம் புதிய வஸ்தைக்கொண்டு செயற்கையான வரிசைப் பற்களை நாம்செய்து உதவிவருகின்ருேம். இவ்வாறு பற்களை அமைக்கும் முறையானது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அதிகம் புதிய முறையாகும்.

தயவுசெய்து ஓர்தரம் நம்மைச் சந்தித்து ஆலோசனை கேட்பீராக! இதற்கு நீர் எவ்வித உபகாரமும் செய்யவேண்டியதில்லை.

நாம்செய்யும் ஒவ்வோர்பணிக்கும் உத்தரவாதம் அளிக்கின்ருேம். எப்போதும் திருப்தியடைந்து செல்லும் ஆயிரக்கணக்கான வாடிக்கைகாரரே நமது சிறந்த பிரசித்தகாரர்கள்.

பத்திருனுஸ், பல் - கண் வேலைகள்
28, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதய இரக்கத்தாலும் வண. மாட்டின் புரோ சுவாமி மன்ருட்டாலும் சுகம் கிடைக்கப்பெற்றேன். மேலும் எனக்கும் எனது குடும்பத்துக்கும் நீடிய சுகத்தைத் தருவார்களாக.

வ. சூ. க. பறுனுந்து

## கன்னிகை அல்போன்சாவின் அதிசய வரம்

எனக்குற்ற வியாதியின் நிமித்தம் 9 மாதகாலமாகக் கஷ்டப்பட்டேன். குடாநாட்டின் பிரபல வைத்தியசாலைகளாகிய யாழ்ப்பாணம், மானிப்பாய், மூளாய், இணுவில் முதலிய இடங்களிலும் ஆயுர்வேத வைத்தியர்களிடத்திலும் வைத்தியம் செய்வித்தும் சுகமே கிடைக்கவில்லை. ஈற்றில் சங். அல்போன்சா கன்னிகாஸ்திரியின் பேரில் நேர்த்திவைத்து ஆயுர்வேதவைத்தியமருந்துகள் உண்டுவந்தேன். அற்புதவிதமாக, எனக்கிருந்த தாங்கொணுக் கபாலக்குத்து என்னும் வருத்தம் சுகமடைந்தது. என்னுடைய நேர்த்தியின்படி பாதுகாவலனில்பிரசுரிக்கின்றேன். அவவின் நாமம் புகழப்படுவதாக.

க. அ. தி.

ஏழாலை கிழக்கு

## நேர்த்தியின் பூர்த்தி

பரிசுத்த லூர்துநாயகியினதும், அர்ச். பிலோமினம்மாளினதும் வல்லமையுள்ள மன்ருட்டினல் எனது குழந்தைகளுக்கு ஏற்பட்ட வியாதிகள் பூரணசுகமாயின. இவர்கள் நாமங்கள் புகழப்படுவனவாக. நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கின்றேன்.

பாஷையூர் G. J. S. S.

## விளம்பரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் அச்சுவேலிக்கிராமப் புனருத்தாரணத்திட்டத்தின்கீழ் (49) நாற்பத்தொன்பதுவீடுகள் கட்டுவதற்கு 1949-ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 20-ந்திகதி செவ்வாய்க்கிழமை 12 மணிவரைக்கும் கொழும்பு கிருஷிகப் பகுதி ரெண்டன்போட்தலைவர் விண்ணப்பபத்திரங்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

குறித்த விண்ணப்பப்பத்திரங்கள் ரூபா 50/- கச்சேரியில் அல்லது திறைசேரியில் கட்டிய ஒவ்வொரு பற்றுச்சீட்டிற்கும் ஒவ்வொரு விண்ணப்பப் பத்திரமாக வடமாகாண ஏசண்டர் அவர்களிடமிருந்து 1949-ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 10-ந்திகதி சனிக்கிழமை பகல் 12 மணிக்குள் பெற்றுக்கொள்ளவேண்டும்.

மறுவிபரங்கள் யாழ்ப்பாணக்கச்சேரி வடமாகாண ஏசண்டரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

## அறிவித்தல்

இதன்கீழ் காணப்படும் விலைக்கு அரசாங்க மரக்காலையில் தற்சமயம் விறகு விற்கப்படுகின்றது.

| | | ரூபா. சதம். |
|---|---|---|
| யாழ்ப்பாணம் காலையில் | | 27-00 |
| சுண்ணுகம் | ,, | 30-00 |
| பருத்தித்துறை | ,, | 27-25 |

2. விறகு வாங்குபவர்கள் காலையில் உள்ளவேலை ஆட்களைக்கொண்டு ஏற்றிக் கொள்ளவிரும்பினல் மேலதிகமாய் 65 சதம் தொன் ஒன்றுக்குக்கொடுக்க வேண்டும்.

3. காலையில் கொடுக்கும் பணத்திற்கு டிப்போகீப்பரிடம் றிசீற் பெற்றுக்கொள்ளவேண்டியது.

எ. சே. தம்பிறஜா
வடபகுதி
யாழ்ப்பாணம். வனபரிபாலனர்.

## விளம்பரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் பூநகரி-துணுக்காய்ப்பகுதி துணுக்காய்க் கிராமத்தில் புதுவெட்டுவான் மணற்குளத்துக்குச் தேவையான திருத்தங்கள் செய்வதற்கு, வடமாகாண ஏஜண்டரவர்கள் 1949-ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 30-ந்திகதி செவ்வாய்க்கிழமை 12 மணி வரைக்கும் நிரப்பப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

குறித்த விண்ணப்பப்பத்திரங்களை ரூபா 25/- கச்சேரியில்கட்டி வடமாகாண ஏஜண்டரின் கையொப்பம்இட்ட ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கும் ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரமாக ரெண்டர் 1949-ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 20-ந்திகதி சனிக்கிழமை பகல் 12 மணிக்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

மறுவிபரங்களை வடமாகாண ஏஜண்டரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

—1950-ம் ஆண்டின் பரிசுத்தவருடத்திலே நியூயோக்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் ஸ்பெல்மன் ஆண்டவர் ஆயிரம் யாத்திரிகருக்குத் தலைமைவகித்து ரோமாபுரிக்குச் செல்லவிருக்கின்ருர். மாசிமாதத்திலே இந்த யாத்திரை நடந்தேறவிருக்கிறது.

—பரீஸ்நகர் நோட்றேடாம் ஆசனக் கோவிலிலே சமீபத்தில்பிரான்சிய ஆசினிடமாயிருந்துவருகின்ற பாப்பரசின் ஸ்தானீகரான கருதினல் றென்கலி ஆண்டவரால் 200 குருத்துவமாணவர் அப்பதவிக்குரிய பல்வேறுபட்டங்களும் அருளப்பெற்ருர்கள். இவர்களில் குருப்பட்டம் பெற்றவர்கள் 50 பேராவர்.

—அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் வலதுகரம் யப்பானிலிருந்து இந்தியாவுக்குவர மாட்டாதென ரோமாபுரியிலிருந்து நம்பத்தகுந்த செய்திகிடைத்திருக்கிறது. அத்திருக்கரத்தைக் கொண்ட பேழையானது யப்பானிலிருந்து அமெரிக்க ஐக்கியதேசத்தின் வழியாகவே திரும்பவும் ரோமாபுரி கொண்டு செல்லப்படவிருக்கிறது.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 18 1949.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org